
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
யாழ்ப்பாணம்

# பவள விழா மலர் 1911-1986



THIRUNELVELY
# YOUNG MEN'S HINDU ASSOCIATION
**JAFFNA**

## Anniversary 75th Souvenir 1911 - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

— மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

— கந்தரநுபூதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே

— அபிராமி அந்தாதி

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண் சுமந்த நெற்றிக் கவிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

— திருவாசகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சமர்ப்பணம்



## அமரர், பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை

ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து
ஓதிய நூலின் பலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும் திநெல்வேலி இந்து வாலிபர் சங்கமும்

எஸ். சிவலிங்கராஜா (எம். ஏ.)

ஈழத்தின் தமிழ்க் கிராமங்களிலே திருநெல்வேலி பண்டு தொட்டு இன்று வரை ஏதோ ஒரு வகையிலே முக்கியத்துவம் வாய்ந்ததாகவே விளங்குகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முன்னேரான ஞானப்பிரகாச முனிவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவரே. இவர் பறங்கியர் ஆட்சிக் காலத்தில் பசுக் கொலைக்கஞ்சிப பரதேசம் போனவர். சிவஞானசித்தியாருக்கு இவர் கண்ட உரையோடு திருநெல்வேலியின் பெயரும் வாழ்கிறது.

கற்ருேர்களைத் தம்பாலீர்த்துப் பிடிக்கும் ஒருவித பசைத் தன்மை திருநெல்வேலிக்கு உண்டு. இப் பசைத்தன்மை ஞானப்பிரகாச முனிவர் போன்ற மகான்களின் பாதம் பட்டிருந்தமையால் ஏற்பட்டிருக்கலாம். திருநெல்வேலி தம்பாலீர்த்த பேரறிஞர்களுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பொ. கைலாசபதி, பேராசிரியர் க. கைலாசபதி முதலியோர் விதந்து குறிப்பிடக்கூடியவர்கள்.

சைவ ஆலயங்களும், பாடசாலைகளும், ஆசிரிய கலாசாலையும் (ஒருகாலத்தில்) பல்கலைக் கழகம் திருநெல்வேலியை உலகளாவிய புகழுக்கு உரியதாக்கின. சிறந்த வைத்தியர்கள், தமிழ் அறிஞர்கள், பலவகை விற்பன்னர்கள் ஆகியோர் பிறந்தும், வளர்ந்தும், வாழ்ந்தும் வந்துள்ளனர் ஈழத் தமிழ்மக்களின் அரசியல் வரலாற்றிலேயும் திருநெல்வேலி குறிப்பிடத்தக்க முக்கியமான இடத்தையே வகிக்கின்றது.

சமய, சமூக, அரசியல் விஷயங்களில் முக்கியம் பெறும் திருநெல்வேலியிலே 1911-ம் ஆண்டு இந்து வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டமை, அக்கிராமத்தின் முக்கியத்துவத்தினையும் முதன்மையையுமே விளக்குகின்றது. ஈழநாட்டிலே பல சங்கங்கள் அவ்வப்போது தோன்றி மறைந்துள்ளன. ஆனால் 1911-ம் ஆண்டு தோன்றிய ஒரு சங்கம் இன்றுவரை ஆரோக்கியத்துடன் நின்று நிலைப்பது கூர்ந்து அவதானித்துப் பாராட்டப்பட வேண்டியதொன்ருகும்

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு வயது மூத்தது யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் யாப்புக்களைப் பின்பற்றியே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் யாப்புக்கள் வரையப்பட்டன.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பன்முகப்பட்ட பணிகளுள்ளே ஊடுபாவாக கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் இன்று சமய சமூக வரம்புகளைக் கடந்து செயற்படுவது உண்மையே. எனினும் இதன் பெயர் இதன் தோற்றத்திற்கான காரணத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்லியமாகக் காட்டி நிற்கின்றது. அந்நிய மதங்களால் தமிழுக்கும், சைவத்திற்கும் ஏற்படும் துன்பங்களைத் துடைப்பதற்காகத் துடிப்பான திருநெல்வேலி இளைஞர்கள் சிலர் சேர்ந்து இந்து வாலிபர் சங்கத்தினை நிறுவியுள்ளனர் என ஊகிப்பதில் தவறெதுவும் இருக்க நியாயமில்லை.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துடனும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துடனும் தொடர்புடைய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் தென்மராட்சியைச் சேர்ந்த மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை குடும்பத்திற்கும் வடமராட்சியைச் சேர்ந்த புலோலிக் கிராமத்திற்கும் நெருக்கமான உறவுகளும் உண்டு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் 1929-ம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே விரிவுரையாற்றத் தொடங்குகின்றார். 1929-ம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்த பண்டிதமணி தமது மரண பரியந்தம் வரை திருநெல்வேலியிலே வாழ்ந்தார். பண்டிதமணியைத் திருநெல்வேலி மண் தமக்காக்கிக்கொண்டது. பண்டிதமணியின் நூல்களிலே கலாசாலை வீதி, திருநெல்வேலி என்ற முகவரியே இருக்கும். திருநெல்வேலி தமிழுலகெங்கும் அறியப்பட அவர் நூல்கள், முகவுரைகள், அணிந்துரைகள் முதலியன உதவுகின்றன. இவ்வாறே பேராசிரியர் க. கைலாசபதியின் நூல்களிலேயும் அணிந்துரைகளிலேயும் இராச வீதி திருநெல்வேலி என்ற முகவரி இருப்பதை அவதானிக்க முடியும். கற்றோரைக் கவரும் மண் திருநெல்வேலி என்பதையே இம் முகவரிகள் காட்டி நிற்கின்றன.

திருநெல்வேலியில் வாழ்ந்த பண்டிதமணி அக்கிராமத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் பற்றுறுதியுடன் கலந்துகொண்டார். இந்த வகையில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்துடனும் தன்னை இணைத்துக்கொண்டார். அறிவுத் திறனும், ஆற்றலும், நல்ல பதவியும், இளமைத் துடிப்பும் உடைய பண்டிதமணியின் செயற்பாடு இந்து வாலிபர் சங்கத்துக்கு மிகுந்த பயனளிப்பதாகியது. இறுதிக் காலம்வரை இவர் இந்து வாலிபர் சங்கத்துடன் இணைந்தே இருந்தார்.

இன்றைய இந்து வாலிபர் சங்கமும் பண்டிதமணியின் பண்பையும் பயனையும் அறிந்து உரிய முறையிலே கௌரவித்துள்ளது. திருநெல்வேலியும் பண்டிதமணியை இருகரம் நீட்டி வரவேற்று மகிழ்ந்தது. அறிஞர் குலத்தை அரவணைக்கும் திருநெல்வேலியின் பண்பு நீண்டு தொடர்வதாக இன்றும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் குறுகிய வட்டங்களைக் கடந்து அக உலகச் சிந்தனையோடு தொழிற்படுவது பாராட்டிற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க பவள விழா - 1986

## போஷகர் ஆசி உரை



பத்து வயதில் 1916-ம் ஆண்டு 5-வது ஆண்டு விழாவில் முதல் முதல் வருடாந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். எனது மூத்த சகோதரர்கள் என்னைக் கூட்டிப்போயினர். அன்று முதல் இந்து வாலிபர் சங்கம் எனது குடும்பம்போலானது. எனது வயதுடையவர்களுக்குத் தேவாரம் என்பன நடாத்தப்பட்டன. எவ்வளவு ஆர்வத்துடன் இதைச் செய்தேன் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அப்போ என் தோழர்களான Dr. S. நடராஜா, ஆசிரியர் தியாகராஜா, பொறியியல் மாணவன் ந. பொன்னம்பலம், சீ. பொன்னுத்துரை, இன்னும் பலர் இந்து வாலிபர் சங்கத்தின் பாலிய அங்கத்தவர்களாக இருந்து வந்தோம். எங்களுக்கு வழிகாட்டிகளாக எமக்கு வயதில் மூத்தவர்களான அல்லியர் பொன்னண்ணை, Dr. பசுபதி, T நன்னித்தம்பி, A. C. நடராஜா, சி. சரவணமுத்து, K. S. சுப்பிரமணியம், வைரவநாதன் ஆகியோர் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து வந்தார்கள். இவர்கள் எங்களை விளையாட்டுத் துறையிலும் சங்கக் கூட்டங்களிலும் மிகத் திறமையாக வழிநடாத்தினுர்கள். இவர்கள் ஆற்றிய உதவி இன்னும் என் ஞாபகத்தில் வரும்போது சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

நாங்கள் வெவ்வேறு பாடசாலைகளிற் சேர்ந்து படித்து வந்தாலும் இச் சங்கத்தின் வைபவங்கள் தான் எமது மனதில் முதலிடம் பெறும்.

எங்கள் அங்கத்தவர்கள் பல பல துறைகளிலும் வெவ்வேறு நாடுகளுக்குப் போயிருந்தும் பழகிய பழக்கங்களும், சமூக சேவையில் முன் நிற்கும் ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி, சமய வித்தியாசம் காட்டாது ஒரே வயிற்றுப் பிள்ளைகள் போல் நடமாடியதும் என்னால் மறக்கவே முடியாது.

பணிக்கர் வளவில் விளையாடித் திறமை பெற்ற எங்களிற் பலர் வெவ்வேறு இடங்களிலும் விளையாடித் தங்கள் திறமையைக் காட்டி அகில இலங்கையிலுமே நற்கீர்த்தி பெற்று வந்திருந்த பெருமை எமக்கு உண்டு. தர்க்க வாதங்களில் பண்புடனும், அன்புடனும், எதிர்ப் பக்கத்தைக் கௌரவித்தும் எங்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் இலக்கிய மேடை, அரசியல் மேடைகளிலும் உரையாற்றிப் பிரசித்தி பெற்று இருந்ததை நாம் அறிவோம்.

50 வது ஆண்டு விழா கொண்டாடிய பொழுது நான் மட்டக்களப்பில் என் கடமையில் ஈடுபட்டு இருந்தேன். அப்போது கிழக்கு மாகாணத்திலிருந்து, வடக்கு மாகாணம் வரை எனது மனைவி மக்கள் அனைவரையும் என்னுடன் கூட்டிவந்து அவ் விழாவிற் பங்கு பற்றினேன்.

தற்போது காட்சி அளிக்கும் எங்கள் சங்கக் கட்டிடம் அங்கத்தவர்களாகிய நாங்களே கூலிகளாகவும், தொழிலாளர்களாகவும், உதவியாளர்களாகவும் நின்று கட்டிய கட்டிடமாகும். வயது வித்தியாசம் காட்டாமலும், எல்லோரும் ஒன்றுபட்டு இதை நடாத்தி முடித்தது எனக்கு மிகவும் பெருமையைத் தருகிறது.

இன்னும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் 75-ம் ஆண்டு பூர்த்தியாகியும், வீறுநடை போட்டு தன் பிள்ளைகளை கட்டித் தழுவிக் காப்பாற்றும் ஆர்வத்தைப் பார்க்க எங்கள் சந்ததிக்கும், இன்னும் எத்தனையோ சந்ததிக்கும் நின்று பணியாற்றும் என்று உணரும்போது, எம்மை ஈன்றெடுத்த இறைவனுக்கே வணக்கம் கூறி இதை முடிக்கிறேன்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சி. தம்பித்துரை
முன்னாள் மாவட்ட நீதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு - வெளிநாட்டுத் தொலைபேசி, ரெலெக்ஸ்
சேவையை உடனுக்குடன் பாதுகாப்பான சூழலில்
தொடர்பு கொள்ள

ALTRA COMMUNICATIONS
THIRUNELVELY JUNCTION
THIRUNELVELY.

துர்க்கா ரேணிங் இன்டஸ்றீஸ்
56 A (376), மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி, :: யாழ்ப்பாணம்.

சகல விதமான கடைச்சல் வேலைகள்
★ குறைந்த செலவில் ★ குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## (இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்)

# அவர்களின் ஆசி

**அருட் பெருந்தகையீர்!**

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தனது 75-வது ஆண்டு நிறைவு விழா எடுக்கவிருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். கோலாகலமாகத் தோன்றி குறுகிய காலத்தில் செயல்பாடற்று மறைந்துபோன மன்றங்களை, கழகங்களை, சங்கங்களை நாம் கண்டுள்ளோம். அவைகளைப் போலல்லாது இச் சங்கம் நிலைத்து அயராது சேவையாற்றி வருவது பாராட்டுக்குரியது. இதன் வளர்ச்சிக்குக் காரணம் அதனைச்சார்ந்து அங்கம் வகிக்கும் அன்பர்களின் ஒற்றுமை. மன உறுதி, சமயப் பற்று, தொண்டு, மனப்பான்மை ஆகியன எனின் மிகையாகாது.

மேலும் இச் சங்கத்தவர் தொண்டர்களாகவே விளங்குகிறார்கள் என்பது எமது மதிப்பீடு. தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே, அந்த வகையில் அவர்களிடம் தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை வளர்வதும் இயல்பானதே. இவை இல்லாவிடத்து நீதி, கண்ணியம், கடமை, நேர்மை, வாய்மை ஆகிய பண்புகள் பொசிந்துவிடும். இவைதாம் இளைஞர்களின் சீரிய வாழ்க்கைக்கு ஏதுவானவையாகும்.

இக் காலகட்டத்தில் மலர் வெளியிடுவதும். விழா எடுப்பதும் இலகுவான காரியமல்ல. எனினும் இச் சங்கத்தினர் இந்தப் பணியைத் தொடர்ந்து சிறப்புறச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்க தொன்றாகும். இவர்களின் அருள் முயற்சி மேன்மேலும் வெற்றியளிக்க வேண்டுமென உளமார இறையருளை சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்

திருநெல்வேலி
(பாதுகாப்பான, அமைதியான சூழல்)

## A/L 87 - 88, விரைவில் A/L89

தொடங்கவுள்ளது.

எமது ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| திருவாளர்கள்: | மகாதேவா | : | இரசாயனவியல் |
| | பத்மநாதன் | : | பௌதிகவியல் |
| | சிவவீரசிங்கம் | : | தாவரவியல் |
| | தம்பிராசா | : | விலங்கியல் |
| | பிரபல ஆசிரியர்: | | தூய/பிரயோக கணிதம் |

75-வது வருட பவள விழாவை கொண்டாடும்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்துக்கு
எமது நல்லாசிகள்

★

# ஏ. கே. எஸ். நகை மாளிகை

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாராட்டும் - வாழ்த்தும்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலே நாடெங்கும் மறுமலர்ச்சி மலர்ந்து வந்த வேளையிலே எங்கள் அயலூரான திருநெல்வேலியிலே 1910-ம் ஆண்டளவில் முற்போக்கும் நற்குணமும் கொண்ட இளைஞர்கள் வை. எம். எச். ஏ. என்னும் இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஆரம்பித்த இந்த நிலையம் பெரியவர்கள் பலரின் நல்லாசிகள் பெற்று வளர்ந்தது. தவத்திரு யோகசுவாமிகள் நாள்தோறும் நடைபவனியாய் வந்து இருந்து பத்திரிகைகள் படிக்கக் கேட்டு, அறிதுயில் புரிந்து ஏகும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். பரோபகாரி பொன்னண்ணன் முதலான பெரியவர்கள் முன்னின்று நடத்திய இந்த மன்றத்தைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களே வாழ்த்தியுள்ளார். வெள்ளிவிழா, பொன் விழா, வைர விழாப் பொலிவு கண்ட இந்த நிலையம் இன்று பவள விழா காணும்போது நாமும் கூட நிற்கும் பேறு கிடைத்தமைக்குப் பெருமைப் படுகிறோம். இனி வருங் காலத்தில் நாமெல்லோரும் நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவோமாக.

— க. கனகராசா, ஜே. பி.

(அதிபர், மில்க் வைற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான சிற்றுண்டி வகைகளையும்
உடனுக்குடன் சுடச்சுட பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

# வேல்முருகன் கபே

★ சைவ ஹோட்டல் ★

திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

எமது நல்லாசிகள் உரித்தாகுக

# பொ. அம்பலவாணர்

★ நகை மாளிகை ★

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 23199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. சண்முகநாதன்

**( உ. அ. அதிபர் பணிமனை )**

**நல்லூர்**

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமானது 1911-ம் ஆண்டு தொடக்கப்பட்டு இன்றுடன் 75 வருடங்கள் தனது சேவையைப் பூர்த்தி செய்கின்றது. ஒவ்வொரு வருடமும் நல்லூர்க் கந்தன் பக்தர்களுக்கு பந்தல் அமைத்து, தாக சாந்தியும் அளித்து வருகின்றது அத்துடன் மகா சிவராத்திரி, நவராத்திரி போன்ற பல சமய, கலாச்சார விழாக்களையும், யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுடன் பல போட்டிகளில் பங்குகொண்டு விருதுகளும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு பாராட்டு விழா எடுத்ததுடன் ஆறுமுகநாவலரின் நூறுவது ஆண்டு விழாவையும் கொண்டாடியுள்ளது. பல சமூக அபிவிருத்தி சேவைகளில் பங்கு பற்றியதுடன், உதாரணமாக 1985-ம் ஆண்டு சங்க முன்றலில் ஒரு குழாய்க் கிணறு அமைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் வசதியும் செய்துகொடுத்துள்ளது. இப்படியாக கடந்த 75 வருடங்களாகச் சேவையாற்றும் இச் சங்கம் மேலும் மேலும் விருத்தியடைந்து பொது மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமென வாழ்த்தி எனது ஆசியை வழங்குகின்றேன்.

★ சகலவிதமான சிற்றுண்டி வகைகள்
★ கேக் வகைகள்
★ குளிர்பான வகைகள்
யாவற்றுக்கும் குறித்த நேரத்தில் ஓடர் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.

சதா கபே ★ திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

★ சகலவிதமான பலசரக்கு சாமான்களையும்
★ பால்மா வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

குகன் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHAKTHY TEXTILE MILL

We have the best selection
in Wholesale
for

**SHIRTINGS, BEDSHEETS
AND PIYAMAS**

Palaly Road,
Thirunelvely,
JAFFNA.

குறைந்த விலையில் திறமான பயனைப் பெற
ஒருதரம் வந்து பாருங்கள்

★ திறம்மிக்க சேட் வகைகள் ★ துணி வகைகள்
★ பெட்சீட் வகைகள் ★ சாரம் வகைகளுக்கு
சிறந்த இடம்

# சக்தி மின்தறி நிலையம்

(மொத்த விற்பனையாளர்)

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75-வது பவள விழா கொண்டாடும்
# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திற்கு
# எனது நல் வாழ்த்துக்கள்!

### வைத்திய கலாநிதி செல்வி. சின்னப்பா பரமேஸ்வரி

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தனது 75-வது வருடத்தைப் பூர்த்தி செய்து பவள விழாக் கொண்டாடும் இவ் வேளையில் சங்கம் எமது கிராம மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆற்றிய சேவை அளவிடத்தக்கது. ஒளிவிளக்காக எமது கிராமத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இச்சங்கம் பல அறிஞர்களையும், சைவப் பெரியார்களையும், சமூக சேவையாளர்களையும் கௌரவித்தும், பராட்டு விழா எடுத்தும் வந்துள்ளது. எமது கிராம மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள இச் சங்கம் பலரினுடைய உதவியுடனும் 1916-ம் ஆண்டு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையை ஸ்தாபித்தது மட்டுமல்லாது நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவ காலத்தில் பக்தர்களின் நன்மை கருதி திருநெல்வேலிச் சந்தியில் பந்தல் அமைத்து தாகசாந்தி செய்து வருவது பாராட்டத் தக்கது.

திருவிழாக் காலங்களில் மட்டும் அல்லாது பொதுமக்களின் நன்மை கருதி குறுகிய காலத்தில் சங்கத்தில் அங்கம் வகிக்கும் இளைஞர் பலரின் முயற்சியால் சங்கத்தில் ஒரு குழாய்க் கிணறு அமைத்து சங்க முன்றலில் பொதுமக்களின் பாவனைக்கு நிரந்தர தண்ணீர் வசதி செய்துள்ளது சங்கம் இவ்வூர் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு நூல் நிலையம் ஒன்றையும், விவசாயக் கழகம் முதல் உதவி சிகிச்சை நிலையம், வாசகர் வட்டம் போன்றவற்றை நடாத்தி வருவது குறிப்பிடத் தக்கது. இன்று பவள விழாக் கொண்டாடும் இச் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக விளங்கிய எனது பேரனார் திரு. எஸ். வேலுப்பிள்ளை அவர்கள் விட்டுச்சென்ற பணியை நானும் செய்து சங்கத்தின் வளர்ச்சியில் பங்கு ஏற்று நூறுவது ஆண்டு விழாவையும் நாம் எல்லோரும் கொண்டாடுவோம் என்ற நம்பிக்கையுடன் 75-வது பவள விழா கொண்டாடும் இந்து வாலிபர் சங்கத்தால் திருநெல்வேலி பெருமை அடைகிறது. மேலும் இச் சங்கம் பல நூற்றுண்டுகளைக் கண்டு பொதுமக்களுக்குச் சிறந்த சேவை ஆற்றவேண்டும் என்றும் வாழ்த்தி எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
தனது 75வது வருட பவள விழாவை சிறப்புற நடாத்தவும்
மேன்மேலும் மக்களுக்கு சேவை ஆற்றும்
பொது ஸ்தாபனமாகவும் விளங்கவும்
எமது ஸ்தாபனத்தின் நல்லாசிகள்

# ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

☎ 22752

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. ஜயக்குமார் — தலைவர்



# நான் கடந்த 25 ஆண்டுகள்

எமது சங்கம் தனது 50வது ஆண்டு பொன்விழாவை திரு. ச. சரவண முத்து தலைமையுடன் திரு ம. முத்துலிங்கம் செயலாளராகவும் கொண்டு 1961ம் ஆண்டு விழா நடத்தி தொடர்ந்து முன்னேறியது.

சங்கம் 50வது ஆண்டுகள் ஏற்பட்ட தனது முன்னேற்றத்தை கைவிடாது சிறப்புடன் முன்னேறி தனது 75ம் ஆண்டை கடந்து செல்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன், 50ம் ஆண்டு சாதாரண நிர்வாகசபை அங்கத்தவராக இருந்த நான் இன்று தலைவராக இருந்து 75ம் ஆண்டு விழாவை கொண்டாடு வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆதலால் நான் கடந்துவந்த 25 ஆண்டுகளை நினைவு கூற வேண்டியவனாக இருக்கின்றேன்.

50வது ஆண்டு நினைவாக பொன்விழா மண்டபத்திற்கும் விளையாட்டு அரங்கிற்கும் வைத்திய கலாநிதி V. T. பசுபதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட் டது. பல பகுதிகளால் எமக்கு தரப்பட்ட ஊக்கத்தினாலும் உதவிகளினாலும் பொன்விழா மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டது. உள்ளூரிலும், வெளியூரிலும் எமக்கு உதவி செய்தவர்களுக்கு நாம் எமது நன்றிகளை தெரிவிக்க வேண்டும். இதில் குறிப் பாக வைத்திய கலாநிதி ச. நடராஜா அவர்கள் தாம் சென்ற வெளிநாடுகளில் கூச்சமின்றி பொன்விழா மண்டபத்திற்கு பண உதவி பெற்று வந்தது குறிப்பிட வேண்டும். இவர் மூலம் எமக்கு பண உதவி செய்த சிங்கை/மலேசிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் திருநெல்வேலி மக்களுக்கும் நன்றியுடை யோராய் இருக்கின்றோம். இப்படி பூர்த்தியாகும் நிலையில் இருந்த மண்டபத்தை முழுமையாக பூர்த்திபாக்க முழுமூச்சுடன் செயல்பட்ட எமது இளைஞர்களை மறக்க முடியாது. அதற்கு உதவியாக வேண்டிய காணியை விட்டுக்கொடுத்த அயலவர் திருமதி பூபாலராஜா அவர்களுக்கு சங்கம் என்றும் நன்றி உடையதாகும். பொன் விழா மண்டபம் பூர்த்தியானதும் இளைஞர்கள் மண்டபத்திற்கு நீர் வசதியின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து ஆராய்ந்தார்கள். எமது முன்னோர் விண்ணப்பத்தின் மூலம் வல்லிபுரம் அவர்களால் தோண்டப்பட்ட தருமக்கிணறு தற்போது தருமத்திலிருந்து அடைக்கப்பட்டுள்ளதால் எமது காணியில் ஒரு குழாய்க்கிணறு தோண்டப்பட வேண்டும் என இளைஞர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. குழாய்க்கிணறு தோண்டும் ஸ்ரீ அவர்களை சந்தித்த எமது இளைஞர்கள், அவருடன் அவரது ஆயுதங்களையும் கொண்டு வந்து இரவு பகல் என பாராது இரண்டு நாளில் கிணறு தோண்டி முடித்து, மூன்றாம் நாள் பொங்கலிட்டு நிகழ்ச்சியை முடித்தார்கள். இவர்களது விடாமுயற்சியை அறிந்த உபகாரி ஒருவர் குழாய்க்கிணறுக்கு நீர் இறைக்க ஒரு மின் இயந்திரத்தை உபகரித்தார். இதன் பின்பும் சளைக்காத இளைஞர்கள் சிவதர்ம செம்மல் கனகராசா அவர்களை சந்தித்து தமக்கு ஒரு நீர்தாங்கி கட்டித் தரும்படி கேட்டனர். இவர்களது விடா முயற்சியையும் தன்னம்பிக்கையையும் கண்ட அவர் தனது செலவில் தண்ணீர் தாங்கியை கட்டிக் கொடுத்து இளைஞர்களை ஊக்குவித்து வந்தார்.

பொன்விழா மண்டபம் கட்டி முடிக்கப்பட்டபோதும் விளையாட்டரங்க வேலைகள் நடத்த முடியாது விளையாட்டு மைதானத்தில் சில தடங்கல்கள் ஏற்பட்டன சிலர் மைதானத்தை ஆக்கிரமித்து எமக்கு பல இடையூறுகளை ஏற்படுத்தினர். தற்பொழுது நிலமை ஓரளவு சீரடைந்துள்ளதனால் விரைவில் விளையாட்டரங்கு கட்டி முடிக்கப்படும்.

விளையாட்டு மைதானம் அளவில் குறைக்கப்பட்டபோதும், இளைஞர்களுடைய விளையாட்டு ஆர்வம் எவ்விதத்திலும் குறையவில்லை. பல போட்டிகளிலும், சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டியுள்ளார்கள். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அவர்களால் காலத்திற்கு காலம் நடாத்தும் போட்டிகள் எல்லாவற்றிலும் பங்குபற்றி பல பரிசில்கள் பெற்றுள்ளார்கள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அடுத்து 1983, 1984ஆம் ஆண்டுகளில் வெற்றியீட்டியது. ஒரு வருடம் 56 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் இரண்டாவது மூன்றாவது, நான்காவது இடங்களை எமது சங்கம் பெற்று பலரது பாராட்டையும் பெற்று கொழும்பு "நெசில்ஸ்" நிறுவனம், யாழ் நகரில் நடாத்திய "நெஸ்ரமோல்ட்" சுற்றுப் போட்டியில் உதைபந்தாட்டத்திலும், கிரிக்கற் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று யாழ் நகரையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. K. O. H சங்கானையில் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இரு அணிகள் பங்குபற்றி முதலாம், இரண்டாம் இடங்களை பெற்று இன்னொரு சிறப்பை ஏற்படுத்தியது.

பொன் விழா மண்டபம் பூர்த்தியானதும் உள்ளக விளையாட்டிற்கு ஊக்கம் கொடுத்து 1983இல் தீபாவளி அன்று அங்கத்தவர்களுக்கிடையிலான உள்ளக வெளியக சுற்று போட்டிகளை நடாத்தி தீபாவளி அன்று பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டது. போட்டிகள் ஒவ்வொன்றின் போதும் எமது முன்னைய அங்கத்தவர்கள் பலர் சிறப்பு விருந்தினராக வந்து கலந்துகொண்டதுடன் சுற்றுக்கேடையங்களும் பரிசில்களும் தந்து உற்சாகப்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்



மேற்படி சங்க தண்ணீர் தாங்கி திறப்பு விழா நிகழ்ச்சியின்போது
சங்க உறுப்பினர்களுடன் திரு. சி. தம்பித்துரை, (இளைப்பாறிய நீதிபதி) அவர்களும்
திரு. க கனகராசா (மில்க்வைற் அதிபர்) அவர்களும் காணப்படுகின்றனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் பகுதிக்கு இணையாக பரி யோவான் முதலுதவி படை தனது முதலுதவி சேவையை பல இடங்களிலும் நடாத்தி வருகின்றது. 1970ம் ஆண்டு தொடக்கம் தனி பிரிவாக இயங்கிவரும் இம் முதலுதவி பிரிவு பல அங்கத்தவர்களை தன்னுள் அடக்கி ஆண், பெண் பிரிவாக பயிற்சிகொடுத்து வருகின்றது.

பொன்விழா மண்டபம் மூடிக்கப்பட்டாலும் வாசிகசாலை நூல் நிலைய பகுதிகள் இயங்குவதில் பல சங்கடங்களை நாம் எதிர்நோக்கினோம். எனினும் பலரின் உதவியுடன் தினசரிகளையும் சஞ்சிகைகளையும் எவ்வித இடையூறுமின்றி பார்வைக்கு வைத்து வருகின்றோம். ஆனால் வார சஞ்சிகைகள் பல போடப்பட்ட போதும் போடுவதில் பல சிரமங்கள் ஏற்பட்டன. அதனால் 1983ம் ஆண்டு பலர் நன்கொடை கொடுத்த புத்தகத்துடன் ஆரம்பித்த வாசகர் வட்டம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆனல் இளைஞர்களால் 75ம் ஆண்டு நினைவாக கட்டப்பட இருக்கும் வாசகர் மண்டபத்தின் மூலம் நூல் நிலையம், வாசிகசாலை, வாசகர் வட்டம் திறம்பட இயங்குமென நம்புகின்றோம். எமக்கு இவ்விடையத்தில் ஊக்கமும் உதவியும் அளித்த அங்கத்தவர்கள், நண்பர்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு எமது நன்றியையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எந்த இடையூறுகள் ஏற்பட்டபோதும் எமது சமய கலாசார நிகழ்ச்சிகள் எவ்வளவு இடையூறுமின்றி நடந்தது மகிழ்ச்சிகரமானது. முக்கியமாக ஒவ்வொரு வருடமும் தைப்பொங்கல் நல்லூர்த் திருவிழா தண்ணீர்ப்பந்தல், நவராத்திரி விழா ஆகியன எவ்வித இடையூறுமின்றி நடைபெற்று வருகின்றது. அதைவிட புத்தாண்டு விழா, தீபாவளி விழா, குருபூசைகள் ஆகியன காலத்திற்குக் காலம் நடாத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக எமது சமய பெரியார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு வைத்திய கலாநிதி பட்டம் கொடுக்கப்பட்டதற்கு 10-7-78 இல் எமது சங்கத்தவரால் அவருக்கு உரிய மரியாதை வழங்கப்பட்டது.

காலத்திற்குக் காலம் நாவலர் விழா நடாத்தப்பட்ட போதும் அவரது நூற்றுண்டு விழா 3.12.1979 விழா எம்மால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் மதுரை ஆதீனகர்த்தா சோமசுந்தர ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் எமது சங்கத்திற்கு 15 9.1979இல் வரவு தந்து ஆசிகள் வழங்கினர். அப்போது குறையாக நின்ற பொன்விழா மண்டபத்திற்கு ரூபா 1001 தனது நிதியாக தந்து இம் மண்டபம் ஒரு கல்யாண மண்டபமாக திகழவேண்டும் என ஆசி வழங்கினர். அத்துடன் 28.2 70இல் மாவிட்டபுரத்திலிருந்து நல்லையம் பதிக்கு எழுந்தருளிச் சென்ற நாயன்மார் நால்வருக்கும் திருநெல்வேலி மக்கள் சார்பில் பூரண கும்பம் வைத்து மலர்மாலை சூட்டி வரவேற்று ஆராதனைகள் செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற காலங்களில் எமது பொதுமக்களுக்காக அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வானொலியை அக்கால அரசாங்க உத்தியோகத்தர் பாலசுந்தரம் பெற்றுக் கொடுத்தார். அவரது வழிவந்த மகன் தேவகுமார் இக்கால நடைமுறைக்கு ஒப்ப ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்தார், இதனால் சங்கம் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. அவர்களுக்கு என்றும் நன்றியுடையோராய் இருப்போம்.

எமது செயல்களுக்கு என்றும் அயராது ஊக்கம் தரும் எம்மூர் மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும், பிறஊர் நண்பர்களுக்கும் இந்நேரத்தில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கு. ஐயக்குமார்
தலைவர்



சகலவிதமான

● மரக்கடைச்சல் வேலைகள்

● மரத்தளபாட வேலைகள் யாவும்

குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

சின்னையா தச்சுத் தொழிற்சாலை

காளிகோவிலடி,

திருநெல்வேலி.

மோட்டோர் வைன்டிங்

மின்வயறிங் பொருத்துதல்

மற்றும் மின்சார உபகரணங்கள்

குறுகிய நேரத்தில்

சிறந்த முறையில் செய்து தரப்படும்.

சிறி மோட்டோர்ஸ்

பலாலி வீதி,

திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உங்கள் ஓய்வு நேரங்களை மகிழ்ச்சியுடன் கழிக்க எங்களின் ஓய்வு அற்ற சேவைகள்

★ திரைப்படங்களா, திரைகானங்களா, பக்திப் பாடல் களா இவைகளை பல மொழிகளிலும் பெறவும்

★ மின் உபகரணங்களைச் சிறந்த முறையில் திருத்தி அமைத்துக்கொள்ளவும்

இன்றே நாடுங்கள் :

ஸ்னேக்கா வீடியோ மன்சில்

நவீன சந்தை மேல்மாடி,

திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

எம்மிடம் உங்களுக்குத் தேவைக்கான

இரும்புத் தளபாடப் பொருட்களை மொத்தமாகவும்

சில்லறையாகவும் நியாயமான விலையில்

பெற்றுக்கொள்ள

நம்பிக்கையான ஸ்தாபனம்:

தங்கா ஹாட்வெயர்ஸ்

802/4, பலாலி றேட், திருநெல்வேலிச் சந்தி,

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கின்றேன்............

பல சிக்கல்களின் மத்தியில் 1986ம் ஆண்டு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தனது 75வது ஆண்டு பவள விழாவைக் கொண்டாடுவதோடு தனது நினைவைச் சின்னமாக ஒரு சிறப்பு மலரையும் இவ்வளவு திறம்பட வெளியிடுவதையிட்டு சந்தோசமடைகின்றேன்.

இதற்கு முழுமூச்சாக ஒத்துழைத்த இந்துவாலிபர் சங்க அங்கத்தவர்களான இ. பாஸ்கரன், ந. இரவிதாசன், அ. சாள்ஸ் பாஸ்கரன், கு. நவசீலன், ந. பாஸ்கரன், அ. ஸான்லிமோகன், இ. ஆனந்தகுமாரசாமி, பா. தேவகுமார், சு. குமாரசாமி, கு. சற்குணசீலன், கோ. குணசீலன், இ. சச்சிதானந்தன் மற்றும் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மேலும் இந்து வாலிபர் சங்கம் 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முன் தனது சொந்தத் தேவைகளை வளரும் சமுதாயத்திற்கும் ஊர் மக்களுக்கும் இரவுபகலாகத் தினமும் சேவை செய்து வருகின்றது. 61ம் ஆண்டு அரைகுறையாக இருந்த இச்சங்கக் கட்டிடம் அடுத்துப் பொறுப்பெடுத்த அங்கத்தவர்களின் ஊக்கத்தால் முழுமையாகக் காட்சியளிப்பதுடன் மதில், மின்சாரவசதி விளையாட்டு உபகரணங்கள் அகில உலகத்தில் நடக்கும் சம்பவங்களை உடனுக்குடன் எடுத்துக்காட்ட திரு. பொ. சிவகுமார் அன்பளிப்பாக வழங்கிய தொலைக் காட்சிப் பெட்டியும் பல ஆண்டு காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு பவள விழாக் கொண்டாடப்படும் எமது சங்க மைதானமும் முக்கியமாக சங்கத்தின் தேவைக்கும் பொதுமக்களின் தேவையையும் உணர்ந்தும் இருக்கின்றது.

25 நாட்கள் நடக்கும் நல்லூர்த் திருவிழாவிற்கும் தண்ணீர் தேவைப்படுவதால் தனது கட்டிடத்தின் அருகிலேயே குழாய்க்கிணற்றை 24 மணி நேரத்துள் நீர் வினியோகம் செய்த சாதனை எமது இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்களுக்கே உரியதாகும். அது மட்டுமல்லாமல் சிவதர்ம வள்ளல் திரு. கனகராசா (மில்க்வைற்) உரிமையாளர் அவர்கள் தனது தாயாரின் நினைவுச் சின்னமாக இச்சங்கத்திற்குத் தண்ணீர்த் தாங்கியை கட்டித் தந்ததுமல்லாமல் தண்ணீர் வினியோகக் குழாய்களையும் அன்பளிப்புச் செய்துள்ளார். அத்துடன் வைத்திலிங்கம் மரக்காலை உரிமையாளர் வைத்திலிங்கம் - ரவீந்திரன் அவர்களுக்கும் நகைக்கடை அம்பலவாணர் அவர்கள் நீர் இறைக்கும் மின்சார இயந்திரத்தை வாங்குவதற்குப் பண உதவி செய்தமையால் 24மணி நீர் வினியோகம் நடைபெற்று வருகின்றது.

எமது கிராமத்தில் இன்றைய காலகட்டத்தில் இச்சங்கம் வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதால் சகல அங்கத்தவர்களுக்குமன்றி தமிழ் கலாச்சாரத்துக்கும் சமய நிகழ்ச்சிகளுக்கும் இம்மண்டபம் இருப்பதனல் சகல தேவைகளையும் குறைந்த செலவில் நடாத்தி முடிக்கக்கூடியதாக இருக்கிறது. இத்துடன் இச்சங்கம் சென்ஜோன் அம்புலன்ஸ் என்ற முதலுதவிப் படையினரை உருவாக்கி எமது கிராமத்தின் தேவையை மாத்திரமன்றி வடமாகாணங்களிலும் பொது வைபவங்கள் ஆலய நிகழ்ச்சிகளிலும் கலந்து முதலுதவி மாத்திரமல்லும் போக்குவரத்துச் சேவைகள், அகதிகள் முகாம்களிலும் கூட தமது சேவையை முதலுதவிப் படைப்பிரிவு உத்தியோகத்தர் திரு. சு. குமாரசாமி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் பவள விழாவைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் பொன்விழாக் கொண்டாடிச் சிறப்பித்தவர்களும் தொடக்கத்திலிருந்து சங்கத்தின் தூண்களாகச் சேவையாற்றிய திருவாளர்கள்:

1. திரு. எஸ். சரவணமுத்து
2. திரு. K, ரெட்ணசிங்கம்
3. திரு. K. இராஜேந்திரா
4. திரு. V. S. கந்தையாபிள்ளை
5. திரு. V. பொன்னம்பலம் (பொன்னண்ணர்)
6. திரு. R. இரட்ணசபாபதி
7. திரு. K. பாலசுந்தரம்
8. திரு, K. U. இளையதம்பி
9. திரு. K. S. சுப்பிரமணியம்
10. திரு. M. பாலசுந்தரம்
11. DrV. T. பசுபதி
12. திரு. V. கந்தையா

ஆகியோர் இன்று எம்மிடையே இல்லையென்பதை இட்டு ஆழ்ந்த கவலையை எடுத்துக்கூறுவதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடையுமாறு வேண்டுகின்றோம்.

எமது சங்க உறுப்பினர்களுக்காகவும் பொதுமக்களுக்காகவும் எமது சங்க மண்டபத்தில் நடாத்தும் கூட்டங்களிலும் சமய நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி வந்து சொற்பொழிவாற்றியவருமான அமரர் இலக்கிய கலாநிதி திரு. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மறைவும் எமக்கும் தமிழ் உலகத்திற்கும் ஓர் பேரிழப்பாகும். அவரது ஆத்மா எங்களையும் எமது சங்கத்தையும் ஆசீர்வதிக்கட்டும். இத்துடன் சங்கத்தின் வளர்ச்சிக்கு தங்களுடைய கல்வியை முடித்துக்கொண்டு வெளிநாடுகளில் இருக்கும் எமது சங்க அங்கத்தவர்கள் சகல விதத்திலும் உதவி செய்வதையிட்டு நாம் இன்று மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்ல நன்றியும் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

— நிறைவு —

வணக்கம்

J. N. P. பாக்கியராஜா

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

★ நோர்வே ★ லண்டன் (U. K.)
★ ஜேர்மனி ★ குவைத்
★ சவூதி அரேபியா

நோர்வே, லண்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலாரையும் எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,

சவூதிக்கு ஏயாப்போட் (Airport) வேலைக்கு இம்மாத முடிவுக்குள் பயணம் செய்யலாம்.

சவூதி அரேபியாவுக்கு கிளீனர்ஸ், தோட்ட வேலையாட்கள், கட்டிடத் தொழிலாளர் (Labour) பதவிகளுக்கும் வெற்றிடம் உண்டு. செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூரிலும் வேலைவாய்ப்பு 40 பேருக்கு உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:

# ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்

**N. பாலா**

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

கிளை (1) வங்களாவடிச் சந்தி, வேலணை.
கிளை (2) குப்பிளான் சந்தி, குப்பிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான —

★ இரும்புப் பொருட்களையும்

★ கட்டிடப் பொருட்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்க

ஒரே ஒரு ஸ்தாபனம்

# கீதா ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, :: திருநெல்வேலி.

சகலவிதமான குளிர்பான வகைகளுக்கும்

ஐஸ்கிறீம், கேக் வகைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

# தினேஷ் கூல் பார்

திருநெல்வேலிச் சந்தி

★ குறித்த நேரத்தில் கேக் ஐசிங் செய்து கொடுக்கப்படும் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1986ம் ஆண்டு சபை உறுப்பினர்கள்

1. காப்பாளர்:
   திரு. சி. தம்பித்துரை

2. துணைக் காப்பாளர்கள்:
   திரு. இ. நடராசா திரு. ந. சிவசிதம்பரம் திரு. சி. நடராசா

3. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்:
   திரு சு. நடராசா திரு. சு. சோதிராஜா திரு. கு. ஜெயக்குமார்

4. தலைவர்:
   திரு. குமாரசாமி ஜெயக்குமார்

5. உபதலைவர்கள்:
   திரு. கு. மோகன் திரு. க. சிவராஜா திரு. கா. செல்வராஜா

6. செயலாளர்
   திரு. இ. சுவாமிநாதன்

7. உபசெயலாளர்:
   திரு. இ. பாஸ்கரன்

8. பொருளாளர்:
   திரு. கு. நவசீலன்

9. உபபொருளாளர்
   திரு. அ. ஸ்ரான்லி மோகன்

10. நூலகர்:
    திரு. ந. ரவிதாஸ்

11. உப நூலகர்:
    திரு. மா சத்தியசீலன்

12. கலாச்சாரம்
    திரு. இ. ஆனந்தகுமாரசாமி திரு. சு. குமாரசுவாமி

13. விளையாட்டு:
    திரு. ஜே பாலசுப்பிரமணியம்

14. நிதிக்குழு:
    திரு அ. சாள்ஸ் திரு. கு. சற்குணசீலன் திரு. ந. பாஸ்கரன்

15. உத்தியோகப்பற்றற்ற உத்தியோகத்தர்கள்:
    திரு. ந. ஜெயத்திலகன் திரு. இ. வைத்தியநாதன்
    திரு. பொ. பாக்கியராஜா திரு. நா. உதயகுமார்
    திரு. க. சோதிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க

# சென்ஜோன் அம்புலன்ஸ் படை

போஷகர்: Dr. நடராசா

தலைவர்: கு. ஜெயக்குமார்

பிரிவுப் பொறுப்பதிகாரி சென்ஜோன் அம்புலன்ஸ் திருநெல்வேலி

திரு. J. N. P. பாக்கியராசா (G. S.)

பிரிவு அதிகாரி: சு. குமாரசாமி

பிரிவு அதிகாரி: சு. ஸ்ரான்லி மோகன்

சாஜன்: ந. ரவிதாஸ்

சாஜன்: மா. சத்தியசீலன்

சாஜன்: கு. சற்குணநந்தன்

## சென்ஜோன்

150 படை உத்தியோகஸ்தர் சங்கத்தின் அங்கத்தவர்களாகவும் மாகாணத்தில் நடைபெறும் நல்லூர், கச்சதீவு, நயினாதீவு, மடு, சன்னதி முருகன், மாவிட்டபுரம், சீரணி ஆகிய ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் முழுநேரச் சேவை ஆற்றுவதுடன் களவு, பாதுகாப்பு போக்குவரத்து இடைஞ்சல்களை நிவர்த்தி செய்தும், பொது வைபவங்களிலும் போட்டிகளிலும் பங்குபற்றி தனது சேவை செய்தது மட்டுமன்றி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திற்கும் புகழைத் தேடிக் கொடுக்கின்றது. இச் சேவையால் ஒவ்வொரு அங்கத்தவர்களும் பொதுமக்கள் கூட்டுறவும் சேவை மனப்பான்மையுடனும் பழகக்கூடியதாக இருக்கின்றது.

திருநெல்வேலி பொறுப்பதிகாரி

J. N. P. பாக்கியராசா (G. S.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75வது ஆண்டு பவள விழாவை கொண்டாடும்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திற்கு
எமது ஸ்தாபனத்தின் நல்லாசிகள்

* தோலகட்டி உற்பத்திப் பொருட்கள்
* முரசொலி தினசரி

ஏக விநியோகஸ்தர்கள்:

## ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்

பலாலி றோட், திருநெல்வேலி

பலசரக்கு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

## திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி

பலசரக்கு விற்பனை நிலையம்

குறிப்பு; எம்மிடம் அரிசிமா, கடலைமா, குரக்கன்மா யாவும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUPERB RANK

## PHARMACY & GROCERY

**Palaly Road, – Thirunelvely.**

✶ ஆங்கில மருந்து வகைகள்
✶ பால்மா வகைகள்
✶ பட்டர்
✶ பாடசாலை உபகரணங்கள் யாவற்றிற்கும்

**சுப்பேப் ராங்**
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

---

# K. S. M. இராசநாயகம்
## வர்த்தக நிலையம்

சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளரும்
படம் பிறேம் போடுபவர்களும்

பலாலி வீதி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க வளர்ச்சியில் விளையாட்டின் பங்கு

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் 75 ஆண்டுகள் பூர்த்தியாகி பவள விழாவெடுக்கும் இவ்வேளையில், அந்த விழா மலரில் இக்கட்டுரையை எழுத நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

ஒரு கிராமத்தில் இளைஞர்களுக்கு மத்தியில் விளையாடின் மூலமே ஒருவித இணைப்பு உருவாகிறது இந்த இணைப்பு ஒரு கழகத்தையோ சங்கத்தையோ தோற்றுவிக்க ஏதுவாகிறது. ஒரே நோக்கங்கள் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குறிக்கோளை அடைவதற்குச் சங்கங்களாக இணைவார்கள் அப்படி ஆரம்பிக் கப்பட்ட சங்கங்களில் ஒன்றுதான் எமது இந்து வாலிபர் சங்கம்.

இச்சங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஊன்றுகோலாக நின்ற நல்லெண்ணங் கள் மிக்க பெரியோர்கள் போட்ட உறுதியான அத்திவாரமே இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம். பின்னர் எமது கிராம இளை ஞர்கள் ஒன்றிணைந்து படிப்படியாக இச் சங்கத்தை வளர்த்து வந்தமை ஒரு அஞ் சாதனையாகும். இவ்வளர்ச்சியில் பங்களித்து, இச்சங்கத்தால் தாமும் கிராமமும் வளர்ச்சியடைய எத்தனையோ சந்ததியினர் பாடுபட்டனர். விளையாட்டுத்துறை, வாசிகசாலை, நூல்நிலையம், கலை கலாச்சாரம், சமய நிகழ்ச்சிகள், பொதுப்பணி போன்ற பலதுறைகளிலும் நாளுக்கு நாள் இச்சங்கம் வளர்ச்சியடைந்து வந்தது.

மற்றைய கிராமங்களிலும் இப்படியான சங்கங்கள் உருவாகின. ஆனால் ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் தொடர்ச்சியாக இல்லாமல் போவதால் பல தொடர்ந்தும் இயங்க முடியாமல் போய்விடுகின்றன சில சங்கங்களே இதற்கு விதிவிலக்காக அமைந்தன. திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் இவற்றில் ஒன்று என்று நாங்கள் பெருமையாக கூறக்கூடியதாக இருக்கிறது.

நாம் பலதுறைகளில் வளர்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் இருக்கும். ஆனால் அதில் முக்கியத்துவம் பெறுவது, சிறந்த முறையில் பங்குகொள்ளும் விளை யாட்டில் உருவாகும் ஒற்றுமையாகும். இந்த ஒற்றுமையின் அடிப்படையில் வளர்ச்சி அடைவதற்கு எமது சங்கம் பொதுமக்களுடைய பாராட்டைப் பெற்றது. நல் லொழுக்கத்தைப் பேணும், திடசங்கற்பமுடைய விளையாட்டு வீரன் போட்டிகளில் வெற்றி பெறுவான் அவன் தனது பழக்க வழக்கங்களிலும் பணிகளிலும் சிறந்தவ னாக இருப்பான். இப்படிப்பட்ட வீரர்களைக் கொண்ட ஒரு குழுவும் ஒரு சமூக மும், எந்த ஒரு கூட்டு முயற்சியிலும் வெற்றிபெறுவது நிச்சயம். கூட்டுறவே நாட் டுயர்வு என்ற கூற்றுக்கு அமைய, இந்து வாலிபர் சங்கம் வளர்ச்சியடைந்த மாதி ரியே திருநெல்வேலி கிராமமும் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்தது

எமது சங்கத்தில் உதைபந்தாட்டம், மென்பந்து (Cricket), மெய்வல்லுனர் போட்டி, கால்பந்தாட்டம், உடற்பயிற்சி, டேபிள் டெனிஸ், பற்மின்டன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கராட்டி, கரம் போன்ற பல விளையாட்டுக்களில் அங்கத்தவர்கள் பங்குபற்றுவார்கள். யாழ். குடாநாட்டிலிருக்கும் பல கழகங்கள் எமது இந்து வாலிபர் சங்கக் குழுவுடன் விளையாட்டுப் போட்டியிற் கலந்து கொள்வதற்கு மிகப் பெருமை கொள்வார்கள். எமது விளையாட்டு வீரர்களின் திறமையும் நற்பண்புகளுமே இதற்குக் காரணமாக இருந்தது. எமது வீரர்கள் யாழ் குடாநாட்டில் மட்டுமல்லாது அகில இலங்கைப் போட்டிகளிலும் பங்குபற்றி எமது கிராமத்திற்கும் சங்கத்திற்கும் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள். 1932ம் ஆண்டு அகில இலங்கை பல்கலைக்கழக உதைபந்தாட்டக் குழுவில் எமது பழைய அங்கத்தவர்களில் ஐவர் அடங்கியுள்ளதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். விளையாட்டு மைதானத்தில் உருவாக்கப்படும் சிறந்த விளையாட்டு வீரனின் குணாதிசயம் (Sportsmanship) மற்றைய துறைகளிலும் அவன் சிறந்து விளங்க உதவும்.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க பழைய அங்கத்தவர்களும் புதிய அங்கத்தவர்களும் தமது சங்கத்தின் முயற்சிகளிலும் வெற்றிகளிலும் பெருமையடைவதுடன் தொடர்ந்தும் பல ஆக்கபூர்வ முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று வாழ்த்துகிறோம் "சேவை" ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அதன் அங்கத்தவர்கள் அந்த புனித சேவையைத் தொடர்ந்தும் செய்வார்களாக.

ச. சோதிராஜா
றெப்பார்ஞ திட்ட இணைப்பாளர்
முன்னைய செயலாளர் இந்து வாலிபர் சங்கம்

—✶—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
தனது 74வது வருட பவள விழாவை சிறப்புற நடாத்தவும்
மேன்மேலும் மக்களுக்கு சேவை ஆற்றும்
பொது ஸ்தாபனமாகவும் விளங்கவும்
எமது ஸ்தாபனத்தின் நல்லாசிகள்

சகலவிதமான எரிபொருட்களையும்
கட்டிடப் பொருள்களும்
தரமான போட்டோஸ்ரற் பிரதிகளும்
குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள

# ஏ. எம். ஆர்.

# வர்த்தக நிலையம்

பலாலி வீதி,
திருநெல்வேலி.

# சமயப் பற்று

இன்று ஈழத்தமிழ் இனத்தின் எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாக உள்ளது. மக்கள் பல இன்னல்களுக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். உன்னத பதவியைப் பெறமுடியாத காலமாகத் தெரிகிறது. தமிழ் இனத்துக்குக் கதியில்லைப் போலத் தோன்றுகின்றது. உன்னத பதவியை அடைவதற்கு அவரவர்தாம் காரணம் உள்ள நிறைவுதான் வேண்டியது உள்ளத்தில் நிறைவுண்டானால், உன்னத இலட்சியமுண்டானால், குணச்சிறப்பு உண்டானால் வாழ்வு கிட்டும். இது உண்மை. முற்காலத்திலும் உண்மை. இது எங்களுடைய ஊக்கமும், மனத்திடமும்தான் எங்கள் முன்னேற்றத்திற்குக் காரணம். சிலகாலம் தமிழர் தலைதூக்க முடியாமல் இருக்கலாம். தமிழர்கள் உன்னத பதவியில் இருந்தவர்கள், சுதந்திரமாக வாழ்ந்தவர்கள். அவர்கள் உள்நாட்டிலும் பிறநாட்டினராலும் கௌரவத்தைப் பெற்றிருந்தார்கள். அந்த கௌரவத்துக்குக் காரணம் அவர்களின் தகுதிதான்.

இப்பொழுது தமிழர் தலைதூக்கி நிற்க முடியவில்லை. எந்தக் காலமும் சூரியனைக் கிரகணம் மறைக்க முடியாது. சூரியனின் சுயபிரகாசத்திற்கு அழிவில்லை. ஆனால் எந்த நிலையிலும் எங்கள் உயர்ந்த இலட்சியத்தையும், நம்பிக்கையையும் கைவிடலாகாது.

எங்களுடைய வாழ்விற்குச் சாதனம் சமயப்பற்று. சமயம் இப்பொழுது வேப்பம் பழமாகிவிட்டது. மனத்தின் மாண்புதான் வாழ்க்கைக்கு வித்து என்பதனை முற்காலத்தவர் அறிந்திருந்தனர். ஆனால் பிற்காலத்தில் தமிழன் இந் நம்பிக்கையை இழந்தான். இத்தாழ்வின் பிரதிபலனை இன்று நாங்கள் அனுபவிக்கிறோம். இதிலிருந்து எங்களுக்கு எப்படி மீட்சி கிடைக்கும்? எங்களுக்கு இன்னல் விளைவிக்கின்ற காரணங்களைப் போக்கவல்லது. தெய்வ சிந்தனை. நாயன்மாருடைய வாழ்க்கை வரலாறு இதற்கு சான்று பகரும்.

சமய நாட்டம் எவ்வளவுக் கெவ்வளவு எம்மிடம் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு எம்மிடம் இலட்சுமி கடாச்சமும், சரஸ்வதி கடாச்சமும் நிறைந்திருக்கும். பரமேஸ்வரன் திருவருள் எம்மிடை பொலியும். நாம் எல்லோரும் கல்வி மூலம் உயர்ந்த பட்டங்களையும், உயர் பதவிகளையும் பெறலாம். ஆனால் சமயப்பற்று இல்லாவிட்டால் வாழ்க்கையில் சஞ்சலம் தோன்றும். மனம் சோரும்; தளர்ச்சியடையும் வாழ்விலே எங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிரந்தரமான பேறு எது? மனத் தூய்மை, மனத் திருப்தி என்பவை நாம் பெறவேண்டிய உண்மைப் பேறுகள். சைவமும், தமிழும் தம் வாழ்க்கையின் இலட்சியமாக வாழ்ந்து எமது கிராமத்துக்குப் பெருமை தேடித் தந்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவர். இப்பெரியார் எமது சமய வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறார்.

சந்ததி சந்ததியாக சமயத் தொண்டாற்றி இளைஞர்களிடையே சமயப் பற்றை வளர்க்க வேண்டும், எனினும் பேரவாவுடன் நிறுவப்பட்டது திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம். இத்தொண்டினைக் காலத்துக்குக் காலம் பாராட்டற்குரிய முறையில் இச் சங்கம் நிறைவேற்றி வந்துள்ளது.

சமயப் பெரியார்களை வரவேற்று, அவர்களை கௌரவித்து சமயப் பேச்சுக்களையும், கொண்டாட்டங்களையும், நடாத்தி சமயத் தொண்டில் ஈடுபட்டு மக்களிடையே சமயப் பற்றைப் பரப்ப இச்சங்கம் ஆற்றிவந்த சேவை அளப்பெரியது அதற்கு எமது வாழ்த்துக்கள் மேலும் இத்துறையில் அவர்கள் ஓங்கி வளர்ந்து வெற்றியீட்ட இறைவனை வேண்டுவோமாக.

முற்றும்

**ம. முத்திலிங்கம் அதிபர்**
*திருநெல்வேலி, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமும் திருநெல்வேலி மக்களும்

(ஆ. மகாலிங்கம் பி. ஏ. தலைவர், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபை காப்பாளர், திருநெல்வேலி கலாமன்றம் உ. அ. அ சங்காளை)

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரச் சமூக சமய கலாச்சாரத் துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அரசியல் விழிப்பானது சுய ஆட்சிக்கான கோரிக்கையாகவும், பொருளாதார சமூக நலனுக்கான கோரிக்கைகள் வாழ்க்கைத் தரத்தையும் அதிகரித்த கல்வி சுகாதார போக்குவரத்து வசதிகளையும் சுதேச மொழி சமய கலாச்சார உணர்வுகள் அவற்றின் மறுமலர்ச்சியையும் வேண்டி நின்றன. இவற்றை எய்வதற்கான வழிமுறைகளின் ஓரம்சமாக அரசியல் இயக்கங்களும் நாடெங்கும் தோன்றின. யாழ்ப்பாணத்தில் நாவலர் பெருமான் ஏற்றிவைத்த சைவமெனும் ஒளிவிழக்குப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கங்கள் எமது மாவட்டத்திலும் தம் செல்வாக்கைச் செலுத்தின.

திருநெல்வேலியில் யாழ் மாவட்டத்தின் புகழ்பெற்ற கல்லூரிகளில் கல்விகற்றுக்கொண்டிருந்த புத்திஜீவி இளைஞர்கள் மத்தியில் இக்கிளர்ச்சிகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின. திருநெல்வேலி அக்காலத்திலேயே தமிழ் மணமும், சைவ மணமும் ஒருங்கே கமழும் திருவூராக இருந்தது. 400 ஆண்டுகளுக்கு முன்னரே நாவலர் மூத்த பரம்பரையினரான ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் இதற்கான வித்தை இட்டுச் சென்றார். இச்சூழ்நிலையில் வாழ்ந்த திருநெல்வேலி இளைஞர்கள் தமிழ்மொழி, சமயம், கலாச்சாரம், கல்வி, சமூகநிலை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1911ல் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் எனும் தாபனத்தை உருவாக்கினர். இச்சங்கத்தின் பரிணும வளர்ச்சியானது போற்றுதற்குரிய ஒன்றாகும். 75 ஆண்டுகளாக தம்மக்களின் மொழி, கல்வி கலாச்சார, சமூக அபிவிருத்தியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இன்று இச்சங்கம் பவளவிழாக் கொண்டாடுகின்றது.

ஆரம்பத்தில் நம்மூர் இளைஞர்களின் சமய, கல்வி, உடல்நல வளர்ச்சியில் கவனம் செலுத்திய சங்கம் படிப்படியாக முழு மக்களினதும் சமய கலாச்சார, சங்க அபிவிருத்தியில் கவனம் செலுத்தியது. இளைஞர்களின் பேச்சுத் திறனை அபிவிருத்தி செய்வதற்கு விவாத அரங்குகளையும் உடல்நல வளர்ச்சிக்காக விளையாட்டுத்திடல் ஒன்றை அமைத்து உதைபந்து துடுப்பெடுத்தாடல், கைப்பந்து போன்ற விளையாட்டுக்களையும் ஆரம்பித்து வைத்தது. புகழ்பெற்ற பல உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கிய பெருமை இச்சங்கத்துக்கு உண்டு.

சமய கலாச்சாரத் துறைகளில் சங்கம் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. சமய தீட்சைகளும், நால்வர் பூசைகளும், சமய விழாக்களும், கதாப்பிரசங்கங்களும், சமயப் பெரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகளும் இடையூறின்றி நடாத்தப்பட்டு வருகின்றன. சைவப் பெரியார் சேர். பி இராமநாதன் அவர்களையும், கவியோகி சுத்தானந்த பாரதியாரையும் அழைத்துக் கௌரவித்த பெருமை இச்சங்கத்திற்கு உண்டு அதேபோன்று மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும் சங்கம் பாராட்டிக் கௌரவித்த பெருமை இச்சங்கத்திற்குண்டு. 1918ல் ஆரம்பிக்கப்பட்ட நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாத் தண்ணீர்ப் பந்தல் இன்னும் இடையூறின்றிச் சங்கத்தால் திருநெல்வேலிச் சந்தியில் நடாத்தப்பட்டு வருகின்றது. திருநெல்வேலியில் இந்துமாமன்றம் ஒன்றை அமைத்துப் பேணிவரும் பெருமையும் இச்சங்கத்திற்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மாணவர் சைவச் சூழலினுல் கல்விகற்க வேண்டும் என்னும் ஆவலாய் சங்கம் 1916ல் திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையை ஸ்தாபித்தது. திருநெல்வேலி மாணவர்களின் நலன் கருதி வாசிகசாலை ஒன்றையும் நூல்நிலையம் ஒன்றையும் தனது சொந்தக் கட்டடத்தில் நடாத்தி வருகின்றது.

அரசாங்கத்தினரோ அல்லது வேறெந்த வெளியாளரினதோ கட்டுப்பாட்டை இச்சங்கம் ஏற்கத் தயாராய் இருக்கவில்லை. 1917ல் யாழ்ப்பாண மத்திய இந்து வாலிபர் சங்கம் தம்முடன் இணையுமாறு விடுத்த வேண்டுகோளைச் சங்கம் ஏற்கவில்லை. சமூக அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபட்டுவரும் சங்கங்கள் அரசாங்க உதவி பெறும் வாய்ப்பு இருந்த போதும் சங்கம் இவ்வுதவிகளைப் பெறுவதற்குத் தயக்கம் காட்டியமையால் அரசாங்க உதவிகளை பெறும் நோக்குடன் 1948ல் இந்து வாலிபர் சங்கத்தில் அக்கால முன்னணி உறுப்பினர்கள் சிலரால் "திருநெல்வேலி கலா மன்றம்'' என்னும் சனசமூக நிலையம் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் இந்துவாலிபர் சங்கத்துடன் முரண்பட்டோர் சிலர். இம்மன்றத்தில் சேர்ந்துகொண்டமையால் இடைக்காலத்தில் இவை இரண்டும் முரணுனவை என்ற மாயை ஒன்று உருவாக்கப்பட்டது. குடிசனப் பெருக்கமும் கல்வி வளர்ச்சியும் தலைமைத்துவம் வேண்டி நின்ற இளைஞர்களின் அதிகரித்த எண்ணிக்கையும் இவ்விரு ஸ்தாபனங்களும் தனிவழி சென்று இயங்கவேண்டி நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய போதும் முரண்படவேண்டிய அவசியம் என்றும் எழவில்லை. மாருகக் கூடிய பரிந்துணர்வும் ஒத்துழைப்பும் இச்சங்கங்களிடையே அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

சுருங்கக் கூறின் திருநெல்வேலி மக்களின் தமிழ், சைவ, கலாச்சார உணர்வுகளின் வெளிப்பாடே திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமாகும். அதன் பரிணும வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களின் வரிசையை இச்சிறு கட்டுரையில் குறிப்பிடுவது மிகக் கடினமான பணியென்பதால் அதனை விட்டுவிடுகிறேன். ஆனுல் அவர்களின் விரிந்த உள்ளமும், தாராள மனப்பான்மையும், தியாக உணர்வும் திருநெல்வேலி மக்களால் என்றும் நன்றியுடன் நினைவுகூரப்படல் வேண்டும். பவள விழாக் கொண்டாடும் இந்து வாலிபர் சங்கம் தனது கடந்தகாலச் சேவைகள் பற்றிப் பெருமைப்படும் அதேவேளையில் புதிய பணிகளுக்குத் தன்னைத் தயாராக்குதல் வேண்டும். இங்கு நாம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ருேம் எமது மக்கள் வரலாறுகாணுத முறையில் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுளனர். நம் வீர இளைஞர்களின் தியாகங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தவண்ணம் இருக்கின்றன. நமது வழிபாட்டுத் தலங்களும், மூர்த்திகளும் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களின் அருகாமையில் ஆயுதப்படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு நித்திய கிரியைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இவை போதாதென்று நம்மவருட் சிலரும் தமக்குக் குழிபறிக்கின்றனர். நாவலர் பெருமானுக்கு அவர் பிறந்த பூமியில் அவமதிப்பு. பசுவதைக்குப் பயந்து பிரதேசம் சென்ற ஞானப்பிரகாச முனிவர் பிறந்த திருநெல்வேலியில் மாட்டிறைச்சிக் கடைகள் நம் மக்களின் ஒரு பகுதியினருக்கு ஆலயங்களில் கதவடைப்பு.

இச் சூழ்நிலையில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தனது வரலாற்றுக் கடமையை சரிவர நிறைவேற்றும் என்பது திருநெல்வேலி மக்களின் அசையாத நம்பிக்கை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MULTIVISION

THIRUNELVELY JUNCTION,
THIRUNELVELY

Dealers in ✶ T. V. Deck Cassettes
✶ Radios and
✶ Audio Recording

உங்களுக்குத் தேவையான

- எவர்சில்வர் பாத்திரங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- திருமண அழைப்பிதழ்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மல்ரிவிஷன்**

---

மங்கையர் மனங்கவரும் சகலவிதமான

**உள்நாட்டு வெளிநாட்டு பிடவைகள், பிளவுஸ் துணி வகைகள்**

திருமண வைபவங்களுக்குரிய

**பட்டுப் பிடவைகள் - பட்டு வேட்டிகள்**

**றெடிமேட் ஆடைகள், சூட்டிங், சேட்டிங், ரீ-சேட்**

சிறுவர் சிறுமியருக்குரிய

றெடிமேட் ஆடைகள், சண்சூட் வகைகள்

அனைத்தும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**லிலியா**

2, நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த குளிர்பான வகைகளுக்கும்

சகலவிதமான சிற்றுண்டி வகைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

# வெஸ்கோ கூல்பார்

பலாலி வீதி, திருநெல்வேலி,

சகலவிதமான
இரும்புப் பொருட்களுக்கும்
மின்சார உபகரணங்களுக்கும்
கட்டிடப் பொருட்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

★

## ★ கணபதி காட்வெயர்ஸ் ★

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி,

T. V. டெக், வீடியோ கசற்
வாடகைக்கும்
மற்றும் அன்ரனு பிற்றிங்
செய்வதற்கும்
இன்றே நாடுங்கள்

★

## S. T. L.
## வீடியோ கிளப்

No. 3 நவீன சந்தை மேல்மாடி
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வழி

**கலாநிதி. சி. க. சிற்றம்பலம்**
**(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி)**

நம் நாட்டு வரலாற்றில் ஆங்கிலேயர் வருகை ஒரு திருப்புமுனையாகிறது. இவர்களுக்கு முன்னர் நம்மை அடிமைப்படுத்திய போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகியோரது கலாச்சாரம் நமது கலாச்சாரத்தில் பாரியதாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியில்தான் மேலைத்தேய கலாச்சாரம் நமது கலாச்சாரத்தில் ஊடுருவியது அரச ஆசியுடன் ஆங்கில மொழியும் கிறிஸ்தவ மதமும் பரப்பப்பட்ட அறிவுச் சாளரமெனக் கருதப்பட்ட ஆங்கில மொழியைக் கற்கப் பல வசதிகளும் வாய்ப்புகளும் அளிக்கப்பட்டது. அத்துடன் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவுவதற்கும் பற்பல ஊக்குவிப்புக்களும் கிடைத்தன. இதனால் சுதேச கலாச்சாரத்தைவிட மேலைத்தேச கலாச்சாரம் சிறப்பானது என்ற சிந்தனையும் மேலோங்கியது. இக்காலக்கட்டத்தில்தான் சுதேச கலாச்சாரமென்றால் என்ன என்பதை விளக்கி அதன் மேன்மையை எடுத்துக்காட்டி மேற்கத்தைய கலாச்சாரத் தாக்கத்திலிருந்து அதனைப் பாதுகாத்தல் ஒரு பாரிய பணியாகியது. போர்த்துக்கேய டச்சுக்கார ஆட்சிகளில் அரச போஷாப்பின்மையால் சுதேச கலாச்சாரம் நலிவுற்று வலுவிழந்தது. இதற்கு புத்துயிர் அளித்து அக்கால ஆங்கில கலாச்சாரத்தில் சவாலை எதிர்கொண்டு சமாளித்து அதனை நல்வழிக்கு இட்டுச் சென்ற பாரிய பொறுப்பினை செய்தவர்தான் நல்லூரிற் தோன்றிய ஆறுமுகநாவலராகும். நல்லூர் வரலாற்றுப் புகழ்மிக்க ஓர் இடமாகும். நமது பண்டைய தமிழ் அரசின் ராசதானி இஃதாகும். இதனால் சிங்கள அரசின் இராசதானிகளாகிய அநுராதபுரம், பொலநறுவை போன்று இதற்கும் வரலாற்றில் ஒரு தனியிடம் உண்டு. எனினும் நல்லூரின் பெருமையை தமிழ் கூறும் நல்லுலகு அறிவதற்கு வழிவகுத்தது நாவலர் இப்பதியிற் தோன்றியதே எனலாம். இதனால் நாவலர் நல்லூருக்கு உரியவரல்லர் என்பதும் ஈழம் மட்டுமன்றி உலகெங்கணும் வாழும் சைவர்களினதும் பொதுச்சொத்து என்பதும் வெள்ளிடமலை.

நாவலர் [கி பி. 1822 – 1879] ஆரம்பித்த பணி அக்காலத்தில் ஓர் ஒப்புயர்வற்ற பணியாக அமைந்திருந்தது. காரணம் ஈழத்திலோ அன்றித் தமிழகத்திலோ கூட இத்தகைய கலாச்சார மறுமலர்ச்சி அக்காலத்தில் வேறு எவராலும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் நாவலரின் நடவடிக்கைகள் வெறும் ஈழத்தை மட்டும் உள்ளடக்காது தமிழகத்திலும் பரந்தன. எனினும் ஈழத் தமிழரின் கலாச்சாரத் தனித்துவத்தை அவர் பாதுகாத்த அதே நேரத்தில் தமிழ்கூறும் நல்லுலகின் மேன்மைக்கும் உழைத்த ஒருவராகவே காணப்படுகிறார். நாவலரின் பணிக்கு கிடைத்த அங்கீகாரமே தமிழகத்தில் அவருக்களிக்கப்பட்ட 'நாவலர்' என்ற பட்டமாகும். ஈழத்தில் ஏற்பட்ட கலாச்சார மறுமலர்ச்சியில் நாவலர் பணிதான் முதன்மையாகிறது. இதன் பின்னர்தான் பௌத்த இஸ்லாமிய கலாச்சார மறுமலர்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. இவ்வகையிலும் நாவலர் பணி போற்றத்தக்கது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த இக் கலாச்சார மறுமலர்ச்சிதான் இருபதாம் நூற்றாண்டின் ஆங்கிலேயருக்கெதிரான ஒரு சுதந்திர வேட்கையை வளர்த்த அரசியல் இயக்கங்களுக்கு வழிவகுத்தது. நாவலர் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயருக்கெதிரான சுதேசிகளின் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத காலமாக இருந்தாலும் கூட அக்காலத்து ஈழத்து அரசியலில் விடிவெள்ளிகளாக விளங்கிய சேர். முத்துக் குமாரசுவாமி, சேர். பொன். இராமநாதன் போன்றோரிடம் நாவலர் வைத்திருந்த தொடர்பும் அவர்கள் இவர்மீது வைத்திருந்த பெருமதிப்பும் கலாச்சார மறுமலர்ச்சியில் தந்தையாகி விளங்கிய நாவலர் அரசியலிலும்கூட விழிப்புணர்ச்சி பெற்ற ஒருவராக விளங்கியதை எடுத்துக் காட்டுகிறது.

நாவலர் வழி கடும்பணி நிறைந்ததொன்றாகவே விளங்கியது. காரணம் அக் கால சைவ உலகை நல்வழிப்படுத்தல் மிகமிகச் சிரமமானதொன்றாகவே காணப் பட்டது. இதனால் தனது பணியை மேற்கொள்ளத்தானே சுபபோகங்களைத் துறந்து ஒரு துறவியாகி தூய பிரமாச்சாரிய வாழ்க்கையை மேற்கொண்டார். தன் வாழ்க் கையையே சைவத்தினதும் தமிழினதும் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தார். நாவலர் நினைத்திருந்தால் தனக்குக் கிடைத்த ஆங்கிலக் கல்வியறிவோடு தமது குடும்ப அந் தஸ்த்துக்கேற்ற வகையில் வசதியான ஒரு குடும்பத்தில் மணம்முடித்து சகல சம் பத்துக்களும் பெற்ற ஒருவராக வாழ்ந்திருக்கலாம். அவ்வாறு செய்வதற்கு அவரது மனச்சாட்சி மறுத்தது. தூய பிரமச்சாரியத்தின் விளைவாக கிடைத்த ஆத்மீக பலமும் அவருக்கு உறுதுணையானதால் எத்தனை சவாலையும் சமாளிக்கும் தகுதி படைத்த ஒருவராக நாவலர் பக்குவமடைந்தார். இதனால் தனி ஒரு நபரான இவ ருக்கு மற்றவர்களையெல்லாம் தன்வழி ஆட்கொள்ளும் சக்தியும் திறனும் கிட்டி யது.

அரச ஆதரவுடன் நிறுவன அமைப்பாக இயங்கிய மிஷன்மாரின் சவாலை எதிர்நோக்குவது மிகமிக இலகுவானதொன்றல்ல. இந்து மதம் ஒரு நிறுவன ரீதி யான தன்மையற்ற அரச ஆதரவற்ற மதமே. அத்துடன் அக்கால இந்துக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியோ அன்றிக் கொள்கைப் பிடிப்போ காணப்படவில்லை. நாவலரின் நடவடிக்கைகள், இவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. மிஷனரிமார் மதத்தினைப் பரப்புவதற்கு நூல்களைப் பதிப்பித்து மக்களுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்தியதைப் போன்றே நாவலரும் நூல்களை அச்சுவாகனமேற்றிச் சைவப்பிள்ளைகளுக்குப் பாடசாலைகளையும் ஆரம்பித்தார். நூல்களை அச்சுவானமேற் றுவதென்பது இலகுவான காரியமன்று. அச்சுக்கூட வசதிகள் இல்லாத அக்காலத் தில் தனி ஒருவர் இவற்றில் ஈடுபடுவதற்கு போதிய நிதி தேவைப்பட்டது. நிதி மட்டுமன்றி இத்தொழிலில் பயிற்றப்பட்டோரும் தேவைப்பட்டது நாவலர் இப் பணியில் எதிர்நோக்கிய சிரமங்கள் பல, எனினும் இவற்றின் மத்தியிலும்கூடச் சளைக்காது அவர் வெளியிட்ட நூல்கள் தமிழ் உலகில் அவருக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்தள்ளன ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பத்தொன்பது நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். நூல்களை வெளியிடுவது சுலபம். ஆனால் அவற்றைப் பிழையற வெளியிடுவதே துர்லபம். நாவலர் பதிப்பென்றால் அன்றும் இன்றும் அதற்கென்று தனிமதிப்புண்டு. இத்தகைய பணி நாவலருக்கு ஒரு தனி இடத்தை அளித்துள்ளது. ஈழத்தவருக்கு மட்டுமன்றித் தமிழகத்தவருக்கும்கூட வழிகாட்டியாக இத்துறையில் விளங்கியவர் நாவலர் என்றால் மிகையாகாது. தமிழின் சிறந்த வசன நடையின் மூலகர்த்தாவும் அவரே. தமிழைப் பிரசங்க மொழியாக, மேடைப்பேச்சு மொழியாக பிரபல்யப் படுத்திய பெருமைக்கும் உரியவர் இவரேதான்.

நாவலர் தமது வாதங்கள், பிரசங்கங்கள், பிரசுரங்கள் மூலமாக அக்கால சமுதாயத்தை விழிப்படையச் செய்த சீர்திருத்தவாதியாவர். நாவலர் மேற்கொண்ட 'கஞ்சித் தொட்டித்தர்மம்' இவரின் சமூகசேவைக்கு ஓர் சிறந்த உரைகல்லாகும் மதமும் சமூக சேவையும் இணைந்தவை என்பது நாவலர் கருத்தாகும். இது ஒரு தனிநபரின் மகத்தான சாதனையாகும். நல்லை ''நாவலர் தோன்றிலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே'' என்று ஒரு புலவர் கூறிய வாக்கொன்றே நாவலரின் பங்களிப்புக்குச் சிறந்த சான்றாகும். நாவலர் சிந்தனைகளை அவரது காலப் பின்னணியில் ஆராய்வதே யதார்த்தமானது. இதனைவிடுத்து இக்காலக் கண்ணோட்டத்தில் நோக்கி அவற்றில் பிழை காணமுற்படுவது அர்த்தமற்ற செயலாகும். அத்துடன் இது வெறும் குதர்க்கமான செயல்கூட. நாவலரின் அன்றைய பணி கலாச்சாரத்திற்குப் புத்துயிர் அளிப்பதே. இதனால் அன்றைய சைவ கலாச்சாரத்தின் அம்சங்களை அப்படியே பேணி ஆதரிப்பது தவிர்க்கமுடியாததொன்றாக இருந்தது. சமகாலத்தில் வடஇந்தியாவில் தோன்றிய ஆரிய சமாஜம், பிரமசமாஜம். போன்ற இயக்கங்களிலும் இதே தன்மை காணப்பட்டது. இந்நிலையிற்தான் இன்று நாம் வெறுக்கும் சைவமதத்தில் காணப்படும் சாதிமுறையும் கூட அக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகவே நிகழ்ந்தது. அன்று இக் கட்டுக்கோப்பிலிருந்தே செயற்படுவது தவிர்க்கமுடியாததொன்றாயிற்று. எனினும் நாவலரை அக்காலசூழலில் வைத்து நோக்கும்போது முன்னேற்றமுடைய சிந்தனையாளராகவே அவர் விளங்கினார். சாதியை விடச் சமயமே பெரிதென்று எடுத்துக்காட்ட நாவலர் தவறவில்லை. பிறப்பால் மட்டும் ஒருவன் உயர்ந்தவனாகவில்லை என்றதோடு, ஒழுக்கத்தால் மட்டுமே ஒருவன் உயர்ந்தவன் என நாவலர் அழுத்திச் சொல்லியவை நாவலரின் உயர்ந்த சிந்தனையை எடுத்துக்காட்டுகிறது. அத்துடன் சைவத்தினதும் தமிழினதும் மேன்மைக்காக உழைத்த நாவலர் சைவத்தமிழ் வெறியைக் கூட வளர்க்கவில்லை. சமயமும் மொழியும் சேர்ந்தவெறி பௌத்த சிங்கள வெறியாக ஈழத்தின் தென்பகுதியில் வளர்ந்தது குறிப்பிடத்தக்கது. இதன் தாக்கத்தினை இன்றும் காண முடிகிறது. சைவமும் தமிழும் கலந்த ஒரு வெறியை நாவலர் வளர்த்திருந்தால் ஈழத்தமிழரின் தன்னிகரில்லாத் தலைவராக தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அன்று எழுச்சி பெற்றிருக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் பெருமையை நன்கறிந்த இலங்கை அரசு தேசிய வீரர் வரிசையில் அவரைச் சேர்த்து அவர் பெயரில் முத்திரையும் வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. இது நாவலரின் பணிக்கும் நமது கலாச்சாரத்திற்கும் கிடைத்த அங்கீகாரமாகும். இதற்கு மேலாக இன்றைய காலகட்டத்தில் நமது கலாச்சாரத்திற்குப் புத்துயிர் அளித்து அதனை அழியாது காத்த இப் பெருமகனை நாம் நினைவுகூரல் மிகமிக அவசியமாகின்றது. காரணம் தமிழ் மக்கள் இன்று தமது கலாச்சாரத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கே முனைந்து நிற்கின்ற இவ்வேளையில் இதற்கு வித்திட்டவரை நாம் மறக்கலாமா? நமது கலாச்சாரம் வளர வேண்டுமாயின், நீடித்து நிலைக்க வேண்டுமாயின், அதனை வாழ்விக்க வந்த மகான்களைப் போற்றுவதும் மிகமிக அவசியமாகின்றது. இம்மரபு நம் மக்களிடையே பண்டு தொட்டு நிலவியதொன்றுகும். இவ்வாறு நாம் செய்யும்போதுதான் நமது கலாச்சாரத்தில் பற்று ஏற்படும். அதன் மகிமை அதன் பெருமை நமக்குப் புரியும். இன்றைய காலகட்டத்தில் நமது கலாச்சாரத்தை பாதுகாக்கப் போராடும் நமது இளைஞர்களுக்கெல்லாம் முன்னேடியும் வழிகாட்டியும் நாவலரேதான். இளைஞர்களைப் போன்று நாவலரும் ஒரு தியாகியே. பாதை வேறுயினும் இரு பகுதியினரதும் இலட்சியம் ஒன்றே. அன்று நாவலர் தன்னந்தனியாக நின்று மேற்கொண்ட பணியை இன்று கூட்டாக குழுவாக நின்று நம்மவர்கள் மேற்கொள்ளுகின்றனர். சுருங்கக் கூறின் நாவலர் ஆரம்பித்த பணியின் முனைப்பே இன்றைய தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டமாகும் ஒருகால் நம் இனத்தின் விடுதலை வரலாற்றை எழுதும்போது நிச்சயம் அதில் மூன்று கட்டங்கள் இடம்பெறும். இதன் முதற் கட்டமாக நாவலர் ஆரம்பித்த கலாச்சார மறுமலர்ச்சி அமைகிறது இக்கலாச்சார மறுமலர்ச்சிக்கு அரசியல் வடிவம் கொடுத்த தந்தை செல்வநாயகத்தின் வருகை இதன் இரண்டாவது கட்டமாகும். தந்தையின் அரசியற் சிந்தனையை சிங்கள அரசுகள் அங்கீகரிக்காமை நம் வரலாற்றின் மூன்றுவது இன்றைய கட்டமாகிய விடுதலை இயக்கங்களின் வருகைக்கு வழிவகுத்தது எனலாம்.

இதனுல் நாவலர் இயக்கவாதிகளின். விடுதலை வீரர்களின் சொத்தாளுர் இவரைக் கௌரவிப்பது நமது கலாச்சாரம் நீடித்து நிலைக்க வழி சமைக்கும், இதனை நாம் செய்வோமாக. சுதந்திரம் பெற்ற நாடுகளில் இச் சுதந்திரப் பாதைக்கு தம்மை இட்டுவந்த தியாகச் செம்மல்களைக் கௌரவிப்பது மரபு மட்டுமன்றி அவசியமாகவும் காணப்படுவதை இங்கே நாம் வலியுறுத்துதல் அவசியமாகின்றது.

—*—

75வது வருட பவள விழா சிறப்புற அமையவும், மேலும் தனது சேவையை
மக்களுக்கு நல்கவும் எமது ஸ்தாபனத்தாரின்
நல்லாசிகள் பல உரித்தாகுக.

- தலைசிறந்த முன்னணி வீடியோ படப்பிடிப்பிற்கும்
- மின்பாவனைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் வாங்குவதற்கும்
- கலர் பட பிரதிகளை சிறந்த முறையில் பிறின்ற் செய்வதற்கும்
- சிறந்த முறையில் புகைப்படங்களை (கறுப்பு, வெள்ளை, கலர்) அடிப்பதற்கும்

# த வீடியோ புளொசம்ஸ்

30, Sivapiragasam Road,
Jaffna.

*(பல்கலைக்கழகம் சந்தி)*
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

---

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
மென்மேலும் பல நூற்றாண்டு விழாக்களை காணவேண்டுமென
வாழ்த்தியும், 75வது வருட பவளவிழா சிறப்புற அமையவும்
மக்களுக்கு மேலும் தனது சேவையை வழங்கவேண்டுமென்று
வாழ்த்தி நிற்கின்றோம்.

# M. சிவலோகநாதன்

(மரவேலைத் தொழிற்சாலை
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

# இந்துக் கோயிலின் அமைப்பு

வேதங்களிலே கூறப்பட்டுள்ள சமய நெறி உருவ வணக்கத்தை அறியாததாகும். வழிபாட்டு நிலையங்களாகப் பிரதிஷ்டை செய்து அமைக்கப்பட்ட ஆலயங்கள் இருந்தனவென்பதற்கு இருக்கு வேதத்திலே சான்றுகள் காணப்படவில்லை: ஆனால் சமஸ்கிருத மொழியிலே ஆலயங்களிற் பூசை செய்யும் குருக்கள்மார் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இந்து மதத்திலுள்ள ஆலய வழிபாடானது வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள் என்பவற்றால் விளக்கப்படும். வைதீக நெறியிலிருந்து வளர்ச்சி பெற்ற சமய சாதனம் எனக் கொள்ளலாம். ஆதியில் கோயிலானது வழிபாட்டுக்குரிய சிறிய சிலையைக் கொண்ட ஒரு குடிலாகவே அமைந்தது. குப்தர் காலத்திலேதான் கோயில் வடிவமாக உருப் பெற்றது. இயற்கையழகு பொருந்திய இடங்களே பழம்பெரும் கோயிலாக விளங்கின. ஆற்றங் கரைகளிலும், மரத்தடியிலும் தெய்வங்களின் உருவங்களை அமைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். அதற்குச் சிறு கட்டடங்களை அமைத்தனர். மலைக் குகைகளிலும் ஆரம்ப காலத்தில் கோயில்கள் அமைக்கப்பட்டன.

கோயில்களது தோற்றம் பற்றி ஆராயும்பொழுது கோயிலைப்பற்றிய விளக்கங்களும் வேண்டப்படுகின்றன. கோயிலைக் குறிக்குஞ் சொற்கள், அவற்றிற்கு விளக்கங்கள், கோயிற் கட்டடக் கலையின் தோற்றம், வளர்ச்சி, கோயிலின் அமைப்பு, கோயில் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள், கோயில் அமைப்பதற்கு வேண்டப்படும் நுண்ணறிவு, கோயிற் கோபுரங்கள், தூண்கள், தூண்களில் விளங்குஞ் சிற்பங்கள் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் வரையப்பெற்ற ஓவியங்கள், கொடிமரம், கருவறையின் உச்சியிலுள்ள விமானங்கள், பரிவார மூர்த்திகளுக்கான கருவறைகள், கோயிலுபகரணங்கள் வாகனங்கள், தேர், இசைக்கருவிகள், கோயிற் கல்வெட்டுகள், தல விருட்சங்கள், தல புராணங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் நாமறிய வேண்டியதும் அவசியமாகின்றது. கோயிலோடு தொடர்புடைய விடயங்களை நாமறியும் போது, கோயில் தோற்றமும், அதன் தத்துவங்களும் வேளிப்படுகின்றன. இறைவனை மனம் என்றி வழிபடும் இடமாகக் கோயில் விளங்குகின்றது. இக்கோயில்கள் பெரும்பாலும் இயற்கையழகு பொருந்திய இடங்களிலே அமைந்தமையால், அவற்றைச் சூழவுள்ள இடங்களின் சிறப்பும் ஆராயப்பட்டது. தல விருட்சங்கள், தீர்த்தச் சிறப்புகள் எனப் பிரித்து நோக்கப்பட்டது.

கோயிலுக்கும் மனித வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பினை நமது முன்னோர் கண்டு, கோயில் என்பது உடல் என்னும் கோயிலின் புறச்சின்னம் என விளக்கினர், புறச்சின்னத்தை உடலிலுள்ள தத்துவங்கள் ஒத்திருக்கும்படி கட்ட வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. சுற்றிலும் மதிலெடுத்து ஒருபுறம் பெரிய வாயில் அமைத்து அங்கு ஒரு கோபுரம் அமைக்கின்றனர். அக்கோபுரத்துக்குத் தூலலிங்கம் என்று பெயர். தொலைவிலிருந்து இதனைக் கண்டு தெய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களென எண்ணி வணங்குவது முறை. கோபுரத்தைக் காணும் போதெல்லாம் மக்களுக்குத் தெய்வ நினைவு உண்டாகும் என்ற நோக்கத்துடன் இதனை அமைத்துள்ளனர். மனிதன் தனது வாழ்க்கையைப் பல்வேறு மாற்றங்களுக்கூடாக நடத்திச் செல்லும்போது தன் மனத்தை ஒருவழிப் படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டபோது இத்தகைய கோயில்களை நாடியிருக்க வேண்டும். இறைவன் பற்றிய கோட்பாடுகளையும் கருத்துக்களையும் நிலைபெறச் செய்வதற்காகவே கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆன்மீக வளர்ச்சிக்குத் தீவிர சமயச் சடங்குகள் அடிப்படையாக அமைந்தன. மனிதன் கடவுளை ஒத்தவன். இதனை வேதங்கள், சைவத் திருமுறைகள், வைணவப் பிரபந்தங்கள் போன்ற சமய நூல்கள் யாவும் உணர்த்துகின்றன வழிபாடு அவசியம் என்பதை உணர்ந்து பல வழிபாடுகளையும் மக்களிடையே ஏற்படுத்தினர், கடவுள் எங்கும் நிறைந்திருந்த போதிலும் அவரது உருவத்தை ஓரிடத்திலிருத்தி வழிபடும்போது அந்த இடம் கடவுள் உறைகின்ற இடமாகின்றது இத்தகைய இடங்களையே கோயில் என்றழைத்தனர். கடவுள் உறைகின்ற இடங்களைக் குறிக்கும் பல சொற்கள் சிற்ப நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. தேவ கிருகம், தேவாயதனம் தேவாலயம், தேவகுலம், தேவ மந்திரம், தேவபவனம் தேவஸ்தானம் தேவேஸ்மம் சைத்யம், க்ஷேத்திரம், அர்ச்சாகிருதம், விமானம், பிரசாதம் என்னும் போன்ற சொற்கள் குறிப்பிடத்தக்கவை. சொல் பற்றி சிற்பரத்தினம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. தம் அழகினால் தேவர்களும் மக்களதும் உள்ளங் கவர்ந்து அகமகிழ்வினை எய்துவிப்பதினால் இப்பெயர் பெறுவதாக அந்நூல் கூறும். அரசர்களும் தெய்வங்களும் உறையும் இடம் பிரசாதம் என நிகண்டு குறிப்பிடுகின்றது. கோயில் என்னுந் தமிழ்ச் சொல் கருத்தளவில் பிரசாதத்தையே ஒத்து நிற்கின்ற தென்பர். கோயில் பற்றிய விளக்கத்தை கூற வந்த பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள் (சைவத்திருக் கோயிற் கிரிகை நெறி பக்கம் 68 — 69) வருமாறு விளக்குகின்றனர்.

> ''கோவில் என்னுஞ் சொல் கோயில் எனவும் வழங்குகிறது கோவென்றால் அரசன். இல் என்பது வீடு ஆகவே கோவில் என்பது அரசனது வீடு ஆயிற்று. முன்னர் கூறிய பிரசாதம்என்னும் சொற்பொருள் இதே. வகையாக அமைத்திருப்பது நோக்கற்பாலது. இதனால் அரசனது வீடும், தெய்வத்தின் வீடும் ஒரே நிலையில் வைத்து மதிக்கப்படுவதை காண்கிறோம்.''

இதேபோன்று குடி என்ற தமிழ்ச் சொல்லும் இறைவன் இருப்பிடத்தைக் குறிப்பிடுவதாகும். ஆந்திர தேசத்தில் குடி என்ற சொல்லே வழங்கப்படுகின்றது. கேரளத்தில் பெருங்கோவில்கள் அம்பலம் என்றழைக்கப்படுகின்றன.

பசுவினுடைய உடம்பெங்கனும் பரந்தோடுகின்ற குருதி பக்குவமடைந்து பாலாகப் பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்றுவதற்காக முலைகள் அமைந்திருப்பது உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன் ஆன்ம ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்கின்ற இடமே கோயில் என்பர். கோயிலை அமைக்கும்போது நாற்புறமும் மதிலமைத்து ஒருபுறம் ஒரு பெரிய வாயில் அமைக்கின்றனர். அங்கு பெரிய கோபுரம் அமைக்கப்படுகின்றது. இராஜ கோபுரம் என்றே அழைத்தனர். தாழ்ந்ததிலிருந்து உயர்ந்தது வரையுள்ள எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் கோபுரத்திலே அமைத்து விடுவதன்மூலம் உலகிலுள்ள பொருட்கள் யாவற்றையும் நினைவுக்குக் கொணரும் உலகக் காட்சியாகவும் கோபுரத்தை விளங்க வைத்தனர். கோபுரத்தின் வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி அமைக்கப்படும். வாயில்கள் மூன்றாக இருந்தால் நனவு. கனவு. சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளையும், ஐந்தாக இருந்தால் ஐம் பொறிகளையும், ஏழாக இருந்தால் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, என்னும் இரண்டையும் சேர்த்துக் குறிப்பனவாகவும் கூறுவர். எத்தனை வாயில்கள் ஒரு கோயிலுக்கு இருந்த போதிலும் தரைமட்டமாக உள்ள வாயில் வழியாகவே நாம் கோயிலுக்குச் செல்ல முடியும். இவ்வாறே கடவுள் நாட்டம் ஏற்படும்போது மனம் என்னும் ஒரு வாயிலே எமக்குப் பயன்படும் என கருதினர். கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும்போது முதலில் அமைந்துள்ளது பலிபீடமாகும். அதன் அருகிற் சென்று வீழ்ந்து வணங்கும் போது நமது மனதிலுள்ள கீழ்த்தரமான எண்ணங்களையெல்லாம் பலிகொடுத்து மேலான இயல்புடன் எழுந்தருளுகிறோம். அந்த மேலான இயல்புடனேயே இறைவனை வணங்கச் செல்கிறோம். பின்பு இறைவனைச் சுற்றி வருதல் பிராணயாம முறையைக் காட்டுகின்றது. பலிபீடத்தைச் சார அமைந்திருப்பது கொடித்தம்பம் அதன் முகம் உள்முகமாக அமைக்கப்பட்டிருக்கும் கொடித்தம்பத்தையடுத்து உள்ளிருக்கும் தெய்வத்துக்குரிய வாகனம் அமைக்கப்பட்டிருக்கும். அது ஆன்மாவைக் குறிக்கின்றது. ஆன்மா உள்முகமாக இறைவனை வணங்குகின்றது. இறைவனை அடைவதே ஆன்மாவின் குறிக்கோள் என்பதை வாகனம் இறைவனை நோக்கியிருக்கும் நிலை எமக்கு உணர்த்துகிறது. இத்தத்துவ வழக்கங்கள் கோயில் அமைப்போடும், மக்கள் வாழ்க்கையோடும் தொடர்பு படுத்தப்பட்டிருப்பதாலே இன்று வரை கோயில்கள் நிலைத்திருக்க வழியுண்டாயிற்று. இதனால் ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் சுற்றுமதில், பெருங்கோபுர வாயில், பலிபீடம், கொடித்தம்பம், வாகனம், கர்ப்பக்கிருகம், போன்ற அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோயிலுக்கருகில் பெரும்பாலும் ஒரு கேணியாயினும் அல்லது நீர்நிலையாயினும் இருப்பது வழக்கம். சமய ஆசாரங்களுக்கு நீராடல் முக்கியமானதாக இருந்தமையால் இதுவும் கோயில் அமைப்பினுள் ஒன்றாகவே கருதப்பட்டது. கோயில்களிலே காவியங்கள், புராணங்கள், திருப்பனுவல்கள் படிப்பதற்காகவும் மண்டபங்கள் கட்டப்பட்டன. யாத்திரிகள் தங்குவதற்காகவும் மடங்கள் அமைக்கப்பட்டன. கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் இம்மடங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன பாடல் பெற்ற கோயில்கள் ஈஸ்வரம், பெருங்கோயில், ஆலக் கோயில், கரகக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், துங்கானை மாடம் எனப்பல பெயர்களைக் கொண்டிருந்தன.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான

● இரும்புத் தளபாடங்கள்

● சுருக்குக் கதவுகள் யாவும்

குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

## நாதன் இரும்புத் தொழிற்சாலை

பலாலி வீதி,
திருநெல்வேலி.

உரிமையாளர்; நல்லை நாதன்

## ராம்கரன் புத்தக நிலையம்

பலாலி வீதி,
திருநெல்வேலி.

சகலவிதமான பாடசாலை உபகரணங்களையும்
பரிசுப் பொருட்களையும், சிறுவர் பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கமும்

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினர் பவள விழா எடுக்கும் நேரத்தில் எனது காலத்தில் திருநெல்வேலி பற்றி என்னிடமிருந்து அறிக்கை கேட்டதற்கிணங்க எனது அறிக்கையை சமர்ப்பிப்ப தோடு சங்கத்தின் பவள விழா சிறப்புற நடைபெற எனது நல்லாசிகள்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வாழ்வில் நனிசிறந்ததுவே" என்ற ஆன்றோர் வாக்கிற் கிணங்க இலங்கை நாட்டின் தவப்புதல்வர்களாகிய நாம் பெருமை கொள்ள வேண்டியவர்களே. எனது பிறந்தஊர் திருநெல்வேலியாகஇருந்த பொழுதிலும் எனது சிறுவயதில் அங்கு வாழும் பாக்கியம் எனக்கு கிட்டவில்லை. கல்விப் பொதுத் தராதர சாதாரண வகுப்பு சித்தியெய்தியவுடன் எனது சொந்த கிராமத்திற்கு வரும் வாய்ப்புக்கிட்டியது. பாடசாலை வாழ்க்கை கூட்டில் அடைபட்ட பறவைகளின் வாழ்வாகவே அமைந்தது. கிராமத்தில் காலடி வைத்தவுடன் இடம் புதியது மக்கள் புதியவர்கள் எங்கே போவது என்றநிலையில் திக்கு தெரியாத சமுத்திரத்தில் ஒருகப்பல் தடுமாறியது போலிருந்தவேளை ஒரு வெளிச்சவீட்டில் இருந்து அதன் மின்விளக்கு கரையை காண்பிப்பது போல் முன்னைநாள் சட்டத்தரணி யோகசுந்தரம் இந்து வாலிபர் சங்கத்தில் இன்று பொதுக்கூட்டம் வா போகலாம் என்றார். அத்திசைநோக்கி இருவருமாக சென்றோம் கூட்டம் ஆரம்பமாகியது. அப்பொழுது பொதுப் பார்வையாளனாக இருந்த என்னை பொது செயலாளராக தெரிவு செய்துள்ளனர் அதுவே எனது பொது வாழ்வின் முதற்படி.

பின்பு சில அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் அவர்களுடைய நன்கொடைகள் மூலமும் சிறுநிதி திரட்டப்பட்டது. ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிர்வாகம் மந்த நிலையில் இருந்தது. இந்தநிலையில் ஏனைய வெளிநாட்டு ஸ்தானிகர் காரியாலயங்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் விண்ணப்பித்தேன். தாராளமாக உதவி நல்கினர், உள்ளூர் வாசிகள் தினசரி பத்திரிகைகள் தந்து உதவினர். சங்கத்தில் சிறந்தவாசிகசாலை உருவாக்கியது கிணற்று தவளையாய் இல்லாமல் உலகை பற்றி அறிய வாய்ப்பு கிடைத்தது இதனால்பல இளைஞர்கள் வெளிநாட்டுக்குப் சென்று படிக்க வசதி ஏற்பட்டது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். நாம் திடகாத்திரமானவர்களாயிருத்தல் வேண்டும். மிருகங்களுக்கு ராஜா சிங்கம் போல் வீரசிங்கம் அறிமுகமானார். அவரின் உதவியால் திருநெல்வேலி பிரயோக போஷவிளை திட்டம் என்ற பெயரில் காரியாலயம் திறக்கப்பட்டதோடு இளைஞர்கள் 200 பேர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டு 100 ஆண்கள் 100 பெண்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது, வீட்டுத்தோட்டமும் சத்துணவின் அவசியமும் பற்றி அவர்களுக்கு விளக்கப்பட்டதோடு கழகத்துக்குத் தேவையான உபகரணங்களும் பயிற்சி பெற்றதற்கானசான்றிதள்களும் வழங்கப்பட்டன. இந்த உதவியோடு திருநெல்வேலியில் ஒருஇளம் விவசாயிகள் கழகம் உருவாகியது.

அத்தோடு சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் அடிப்படையில் கனகூல முறையில் கோழி வளர்த்தல், கால் நடைவளர்த்தல் போன்ற பயிற்சியும் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் சென்யோன்ஸ் கல்லூரியில் ஒரு பெரிய பொருட்காட்சி இடம்பெற்றது. எமது கிராமத்தில் இருந்து பலர் பங்குபற்றினர். சிலர் பரிசையும் தட்டிக்கொண்டனர். மேலும் புதுப்பயிர்களான உருளைக்கிழங்கு பம்பாய்வெங் காயம் போன்ற பயிர்கள் இப்பிரதேசத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டது.

எமது இளைஞர்கள் விளையாட்டுத்துறையிலும் பின்னிற்கவில்லை. திருவாளர் சுப்பிரமணியத்தின் முயற்சியால் விளையாட்டுப்போட்டி நடாத்தப்பட்டது. இதனுல் பனிக்கர் வளவு துப்பரவு செய்யப்பட்டது சரித்திரத்தில் முதல் நடந்த விளை யாட்டு விழா என்றும் பலரும் போற்றினர்.

கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை ஒரு போட்டி பலாலி ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்றது அதிலும் அவர்கள் இரண்டவது இடத்தைப் பெற்றனர்.

கண் திருஷ்டிபட்டதுபோல் விளையாட்டு மைதானத்தை ஒருசிலர் சுவீகரித்தனர். கொதிப்படைந்த இளைஞர்கள் இரவோடு இரவாக அவர்களது கொட்டில்களை பிடுங்கி எறிந்தனர். பலர் காயமடைந்தனர், பலர் பொலிசாரால் கைது செய்யப் பட்டனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் காலத்தில் தண்ணீர் பந்தல் நடாத்துவது வழக் கம் கூலிகொடுத்தே பந்தல் போட்டு வந்தார்கள். நிதிநிலை காணமாக இளைஞர் கள். தாமாக சிரமதானம் மூலம் பந்தல் போடுவோம் என்று முன்னுக்கு வந்தனர் அவர்கள் காலகஷ்டம் அந்தநாட்களிலேதான் யாழ்ப்பணத்திற்கு இரட்டைத்தட்டு பஸ் சேவைக்கு விடப்பட்டது. அதற்கேற்றதுபோல் பந்தல் போடவேண்டிய நிலை ஏற்பட்டது. இரவு 10.30 மணிக்குப்பின் சேவை நிற்பாட்டிய பின்னரே வேலை தொடங்க வேண்டும். அப்படிஇருந்தும் இரவென்றும் பாராமல் செய்து வந்த தொண்டை சிறப்பாகசெய்து முடித்த பெருமை அவர்களுக்குரியதே. மேலும் அக் காலத்தில் மடம் ஒன்று இருந்தது. அதில் பொன்னப்பா சுவாமி என்னும் ஒரு பெரி யார் வாழ்ந்து வந்தார். அவர் திருவிழாக் காலத்தில் பந்தலுக்கு வேண்டிய ஊறு காய் செய்துதந்துதவினர். அவரது நினைவு சாலப் பொருந்தும்.

அத்தோடு நின்றுவிடவில்லை ஆலய புனருத்தாரண வேலைகளிலும் ஈடுபட்டனர் கரியப்புலம் ஞானவைரவர் கோவிலில் புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டதோடு இன்றும் வருடாந்த உற்சவ காலங்கள் ஒருநாள் பூசை இந்து வாலிபர் சங்கத்தி னர் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. எமது இந்து வாலிபர் சங்க அங்கத்வர்க ளின் சேவை மேலும் விருத்தியடையவேண்டுமென வேண்டி இறைவனைப் பிரார்த் திப்போமாக. மீண்டும் எமக்கு சந்தர்ப்பம் தந்தமைக்காக அவர்களுக்கு மீண்டும் என் நன்றிகள்.

வணக்கம்

பொ.தி. அரசன்
முன்னைநாள் பொதுச் செயலாளர்
இந்து வாலிபர் சங்கம்.

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற அமைய
எமது நல்லாசிகள்

# சிற்றி ஏஜென்சி

158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பவள விழா சிறப்புற அமையவும்
மேலும் மக்களுக்கு தமது சேவையை வழங்கவும்
எமது நல்லாசிகள்.

# விநாயகா ரேணிங் வோர்க்ஸ்

உரிமையாளர்: M. பாக்கியநாதன்

சகலவிதமான லேத் வேலைகளுக்கும், வார்ப்பு வேலைகளுக்கும்,
நீர் இறைக்கும் இயந்திர பம் வேலைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ இந்துபோட் சு. இராசரத்தினம் அவர்கள்

-- க. சி. குலரத்தினம்

இலங்கைத் தமிழரின் சைவ பாரம்பரியத்தில் மத்திய காலத்தை அடுத்து நாட்டுக்கு வந்த போத்துக்கேயர் தோல் இருக்கச் சுளையை விழுங்கினார்கள் என்றும் அவர்களையடுத்து வந்த ஒல்லாந்தர் சுளையை விட்டுத் தோலை விழுங்கினுர்கள் என்றும் பின்னர் வந்த ஆங்கிலேயர் தோலையும் சுளையையும் விழுங்கினுர்கள் என்றும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நகைச்சுவையாக ஓரிய உண்மையைக் கூறினுர்.

ஐரோப்பியர் வருகையால் மாசடைந்த சைவக் கல்விப் பாரம்பரியம் நாளடைவில் மறுமலர்ச்சி பெற்ற போது முதற் கண்ணுயிருந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் என்றும் இரண்டாங் கண்ணுய் இருந்தவர் காரைநகர் சங்கரப்பிள்ளை அருணுசலம் அவர்கள் என்றும் மூன்ருங் கண்ணுயிருந்தவர் கௌரவ சுப்பிரமணியர் இராசரத்தினம் என்றும் பண்டிதமணி அவர்கள் கருத்தாவமாகக் கூறியுள்ளார்.

நாவலர் அவர்கள் தொடங்கிய சைவ நற்பணிகளில் ஒன்ருய் சைவ ஆசிரியர்களை உருவாக்கும் பணியைத் தொடர்ந்து செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் எடுத்தவர் மகான் அருணுசலம் ஆவர். அவரின் பணியைச் செய்து நிறைவேற்றியவர் இராசரத்தினம் அவர்களாவார். இந்து போட் இராசரத்தினம் என்றும் கௌரவ இராசரத்தினம் என்றும், வழங்கிய அவர்; மயிலிட்டி கோப்பாய், உடுப்பிட்டி, வல்வெட்டி ஊர்களோடும் அச்சுவேலி, நல்லூர் ஆகிய ஊர்களோடும் தொடர்புகொண்டவர். அப்பால் அவர் இலங்கையில் தமிழ்கூறும் ஊர்கள் யாவற்றேடும் நெருங்கிய தொடர்புகொண்டு ஒவ்வொரு வீட்டிலும் அவருடைய பெயர் ஒலிப்பவண் முகத் தொண்டு செய்து வந்தார்.

மயிலிட்டியைச் சேர்ந்த கதிரேசர் என்பவர் கோப்பாயில் நாகமுத்து என்னும் நல்லறச் செல்வியை மணந்து பெற்ற பிள்ளைகளுள் சுப்பிரமணியர் என்பார் உடுப்பிட்டி குமாரசாமி முதலியாரின் பெண்ணும் வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களின் சகோதரியுமான சிவகாமிப்பிள்ளை என்பவரை மணந்து 1884ம் ஆண்டிற் பெற்ற மைந்தனே இராசரத்தினம் ஆவார் சுப்பிரமணியரின் சகோதரியாரை வைமன் கதிரவேற்பிள்ளை அவர்கள் மணந்துகொண்டமையால் அவர் இராசரத்தினம் அவர்களுக்கு இருவழியாலும் மாமனுராயினுர் இராசரத்தினம் அவர்கள் உருவாக்கிய பெருமை கதிரவேற்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். கதிரவேற்பிள்ளை அவர்களின் அருமை மைந்தரே கௌரவ பாலசிங்கம் அவர்களாவர் இளம் வயதில் தந்தையாரை இழந்த இராசரத்தினம் அவர்களையும் கதிரேசர் முதலானவர்களையும், மாமனுர் கதிரவேற்பிள்ளை வட்டுக்கோட்டை சாத்திர கலாசாலையில் பெரும் படிப்புப் படித்துச் சட்டத்துறையில் விற்பத்திமானுகி நீதவான் உத்தியோகம் பார்த்தவர். அவர் நல்லூரில் வாழ்ந்த வீதி இன்றும் அவர் பெயரால் ' வைமன் வீதி" என வழங்கப்படுகின்றது

வைமன் வீதியில் வாழ்ந்த இராசரத்தினம் அவர்கள் அயலில் உள்ள கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியசாலையில் ஆரம்பப் படிப்புப் படித்த பின்னர் மத்திய சுல்லூரியில் படித்து கல்கத்தா பல்கலைக் கழகம் நடத்திய இடைநிலைப் பட்டம் என்னும் F A பரீட்சையிலும் சித்தி எய்தியவர்

சட்டத்துறைக்குப் போதிய தகுதி பெற்றவராகவே அவர் கொழும்பில் சட்டம் பயின்று சட்டத்தரணி அப்புக்காத்தரானுர் அவர் 1908ஆம் ஆண்டில் சட்டப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றும் பெரும் புகழ் பெற்றுர். அவர் கல்லூரி மாணக்கனுயிருந்தபோதே கிறிக்கற் விளையாட்டில் நிபுண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயுமிருந்தவர். உடற்பயிற்சிகள் செய்து உடலுறுதி பெற்று நீண்ட மீசையுடன் ஆஜானுபாகுவாய் மூன்று சில்லுகளமைந்த மோட்டார் வண்டியில் ஓடித்திரிந்தவர்.

அவர் இடையிடை கீரிமலைக்குச் சென்று நீராடி மீறும் சமயங்களில் அங்கே சைவாசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பை நகுலேஸ்வரச் சூழலில் நடத்தி வந்த அருணசலம் அவர்களோடு நெருக்கமாகப் பழகி அவருக்கு வேண்டிய மொழி பெயர்ப்புப் பணிகளைச் செய்து கொடுத்தபோது கல்விப் பணியைப் பற்றிக் கருத்தூன்றிச் சிந்தித்து வந்தார். சட்டத்தரணி இராசரத்தினம் அவர்கள் தமது துறையில் சட்டங்கள் பலவற்றைத் திரட்டி வெளியிட்டு அதனல் புகழ்பெற்றதோடு தமக்கு விருப்பமான கிறிக்கற் ஆட்டத்திலும் நிபுணராய்க் கிறிக்கற் இராசரத்தினம் என்றும் பெயர் பெற்றிருந்தார். அவர் யாழ்ப்பாண நகரில் விளையாட்டுக் கழகம் அமைத்துப் பலவித அப்பியாசங்கள் பழக வாய்ப்பளித்த வேளையில் மதுவொழிப்புப் பிரசாரஞ் செய்து வெற்றியீட்டியதும் உண்டு.

இலங்கைச் சட்ட சபையில் மொத்தப் பிரசித்த சேர். அம்பலவாணர் கனகசபை அவர்களின் தமிழர் மகா சபையில் இராசரத்தினம் அவர்கள் அங்கத்தவராகி அரும் பணிகள் புரிந்து வந்த காலத்தில் தமிழரின் பாரம்பரிய உரிமை நலனுக்காகப் பாடுபட்டு வந்தார்.

தென் இலங்கையில் பௌத்தர்கள் தங்கள் சமய மறுமலர்ச்சியில் ஈடுபட்டுச் சங்கமமைத்துப் பரிபாலனம் செய்சவாறே பௌத்த பாடசாலைகளையும் உருவாக்கித் தொண்டு செய்த வகையில் வட புலத்தாரும் தங்கள் சமயத்துக்கும் மொழிக்கும் மறுமலர்ச்சிகள் காண்பதற்கு முனைந்து சேர். இராமநாதன் அவர்களின் தலைமையில் 9-12-1923ல் சோ சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்னும் சபை உதயமாயிற்று. அது உதயமானநாள் தொடக்கம் அயராது உழைத்து வந்தவர்களுள் இராசரத்தினம் அவர்கள் முன்னணியில் நின்றதால் அவர் இந்து போட் இராசரத்தினம் எனப் பெயர் பெறுவாராயினர்.

அக்காலத்தில் ஆசிரியர்களைப் பயிற்றும் ஏகபோக உரிமை கிறிஸ்தவ மிஷனரிமார்கள் கையிலிருந்ததோடு தமிழ்ப் பாடசாலைகளில் ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகள் நடத்தும் உரிமையும் அவர்களிடமே இருந்தது. புறநடையாக நாவலர் பெயரால் நடைபெற்ற இரு பாடசாலைகளில் மேல் வகுப்புகள் இருந்தன.

தமிழாசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு மத மாற்றம் அவசியமாகும். மேல் வகுப்புப் படிப்பதற்கும் தடைகள் இருந்ததோடு புதிதாகச் சைவப்பாடசாலைகள் அமைப்பதற்கும் மாணக்கர் சராசரி வரவு முதலிய முட்டுக்கட்டைகள் இருத்தன. இவ்வாறுன காலகட்டத்தில் சைவம் வளர்ப்பதற்கென உண்டான சைவ வித்தியா விருத்திச் சங்கம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரின் திருவுருவம் பொறித்த அடையாளத்தோடு "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் இலட்சிய வாசனத்தோடு செயற்பட்டு வந்த காலத்திலே. 1924ஆம் ஆண்டில் இலங்கைச் சட்டசபைத் தேர்தல் நடைபெறலாயிற்று. தேசாதிபதி மணிங் செய்த திருத்தத்தின் பிரகாரம் சபையில் இருக்கக்கூடிய 49 அங்கத்தவருள் 37 பேர் உத்தியோகபற்றற்றவராயிருக்கவும் அவருள் 23 பேர் இலங்கையின் பல தொகுதிகளில் தெரியப்பெற்ற பிரதிநிதிகளாகவும் அவருள் ஐவர் யாழ்ப்பாணத் தொகுதிகளில் பிரதிநிதித்துவம் வகிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது அக்காலத்தில் நடைபெற்ற தேர்தல் மூலம் வட பகுதியில் சேர், பொன். இராமநாதன் மேற்குப் பகுதியில் வைத்திலிங்கம் துரைசாமி கிழக்குப் பகுதி கதிரவேற்பிள்ளை பாலசிங்கம். தெற்குப்பகுதி ஆறுமுகம் கனகரத்தினம், மத்திய பகுதி சுப்பிரமணியம் இராசரத்தினம் ஆகியோர் தெரியப்பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் மட்டக்களப்பில் E. R. தம்பிமுத்து திருகோணமலையில் M. M. சுப்பிரமணியம் கொழும்புத் தமிழ்த் தொகுதியில் அருணாசலம் மகாதேவா தெரியப்பெற்றனர். இவர்கள் எல்லோரும் தலைப்பாகை நீண்ட கோட் உத்தரியம் அணிந்து போயிருந்தமை ஒரு பொற்காலம்.

இவ்வாறாக 1926ம் ஆண்டு முதலாகச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பெரும் பொறுப்பைத் தாங்கிய கௌரவ இராசரத்தினம் ஏனைய தமிழ்ப் பெரியார்கள் துணைகொண்டு சட்ட சபையில் வாதாடி முந்திய தடைச் சட்டங்களை எல்லாம் செல்லாமற் செய்து சைவப் பாடசாலைகள் நாடெங்கும் உருவாவதற்கு வழியமைப்பாராயினர்.

புதிதாகச் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கும் வழிபிறக்கவே பிரதேசமெங்கும் அபிமானிகள் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்குச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு நல்குவாராயினர். இத்தகைய ஒத்துழைப்பும் கொடை வளமும் வந்து குவியவே சைவப்பாடசாலைகள் பெருகி வந்தன. பெருகி வந்த பாடசாலைகளிற் கல்வி கற்பிப்பதற்குப் போதியளவு சைவாசிரியர்கள் கிடையாமற் போகவே இராசரத்தினம் அவர்கள் கல்விப்பணிப்பாளரிடம் மேலதிக ஆசிரியர்களைப் பயிற்றித் தருமாறு விண்ணப்பித்தபோது அவர் இடவசதி காரணமாக அது செய்ய முடியாதென அறிவித்தார். இராசரத்தினம் அவர்கள் உடனடியாகச் சைவாசிரிய கலாசாலையொன்றை ஆரம்பித்தல் வேண்டும் என நினைத்து அதை எங்கே ஆரம்பிக்கலாம் எப்போது ஆரம்பிக்கலாம் என யோசித்த வேளையில் திருநெல்வேலி யூரான பரிஸ்ரர் இராசேந்திரம் என்பவர் தமது மாளிகை போன்ற மனையில் (தம்பி அன்கோ இல்லம்) அந்த ஆண்டின் விஜயதசமி நாளிலேயே ஆரம்பித்துவிடலாம் என உள்ளன்போடு ஆவன செய்வதற்கு முன் வந்தார். அதே நாளில் இராசரத்தினம் அவர்கள் தோட்ட ஐயா எனப் பெயர் பெற்ற வைத்தியர் சபாபதிப்பிள்ளை அவர்கள் உணவு உடை உறைவிடம் கொடுத்து வளர்த்து வந்த ஏழைச் சிறுவர்களையும் கையேற்றார். இவ்வாறாக 1928ஆம் ஆண்டில் விஜயதசமிநாளில் இரண்டு பெரிய நிறுவனங்களை இராசரத்தினம் அவர்கள் ஆரம்பித்து பொறுப்பேற்றார்.

இராசரத்தினம் அவர்கள் ஆரம்பித்த பெரும்பணி செவ்வனே நடைபெறுவதற்குக் கேந்திரத்தானமாகத் திருநெல்வேலியார் செய்த உபகரிப்பு, சேவை, தியாகம், பண்பாடு வரலாற்றில் இடம் பெறவேண்டியன. செம்பாட்டு நிலத்தின் பண்பாட்டு நலத்தால் சைவாசிரிய கலாசாலைச் சூழல் பெரு நிலப்பரப்பில் ஒரு பல்கலைக்கழக வளாகம் போல அமைவதற்குத் திருநெல்வேலியார் இலவசமாயும் குறைந்த விலையிலும் காணி கொடுத்தும் கட்டட வேலைகளுக்கு வரையாது கொடுத்தும் உதவினர்கள்.

சைவாசிரிய கலாசாலை ஏறக்குறைய 1600 ஆசிரியர்களைப் பயிற்றிய போது இராசரத்தினம் அவர்கள் 160 பாடசாலைகளை உருவாக்கியதோடு நெசவு நிலையம் காவிய பாடசாலை முதலியவற்றையும் நடாத்தினர். காவிய பாடசாலை வடமொழி சிங்களம் முதலிய மொழிகளையும் வளர்த்ததென்றால் இவரின் கல்விக் கொள்கை எவ்வாறனது என நன்கறியலாம்.


நாட்டில் நாலாபக்கங்களிலும் நடு மையத்திலும் பல்கலைக்கழகங்கள் கலைக் கல்லூரிகள் அமைய வேண்டும் உயர்தர வகுப்புகளுக்கும் சுற்றுப்புறச் சூழல் உறுதுணையாய் அமைய வேண்டும் நாட்டில் சிங்களமும் செந்தமிழும் தரம் உயர வேண்டும். இவை அரசாங்க மொழியாக வேண்டும். இடையில் ஆங்கில மொழி இன்றியமையாத இணைப்பு மொழியாய் (Associate Language) நிலவுதல் வேண்டும் என்றெல்லாம் அவர் பாடுபட்டார். அவரின் கல்விப்பணி வரலாறுப் புகழ்பெற்றது.

—✶—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75ம் ஆண்டு கொண்டாடும்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திற்கு
எமது நல்லாசிகள்

# நல்லூர்
# பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்
## திருநெல்வேலி.




**15ம் வருடமாக சிறப்புடன் சேவையாற்றும் எம்முடன்**
**இணைந்து மேலும் பயன்பெறுங்கள்.**
**தேவையான சகலவித நுகர்ச்சி, பிடவை, இரும்பு**
**விவசாய பொருட்களை நியாய விலையில்**
**பெறுவதுடன்**
**எமது**
**கதிரை. கொட்டில், கோப்பை, கிளாஸ் ஆகியவற்றையும்**
**வாடகைக்கு பெற்று பயனடையுங்கள்.**

**திருநெல்வேலி.** ☎ **23646**

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தனது
மக்களுக்கான சேவையை 75 ஆண்டுகள்
பூர்த்தி செய்யும் இத்தருணத்தில்
நாமும் உளமார வாழ்த்துகின்றோம்,

# சுந்தரம் பிறதர்ஸ்

173, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24421

★

# சுந்தரம் பிறதர்ஸ்

23, மணல் தறை ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22506

பல்கலைக்கழக சந்தியில் இருந்து யாழ்நகர் நோக்கி
200 யார் தொலைவில் அமைந்துள்ளது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் 75வது ஆண்டு பவள விழாவில் செயலாளராக இருந்து செயலாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் சிறிது காலம் மாத்திரமே செயலாளராக இருந்த போதும் கடந்த காலத்தைப்பற்றி போதியளவு அறிந்து வைத்துள்ளேன்.

பொன் விழா காலத்தில் இளைஞர்கள் சங்க நடவடிக்கைகளில் அதிகமாக பங்கேற்பதில்லை என்ற குறை பரவலாக இருந்ததை நான் அறிவேன் அப்பொழுதெல்லாம் வயதுக்கு மூத்தவர்கள் முன்னின்று செய்யும் காரியங்களுக்கு இளைஞர்கள் உதவியாக இருந்தார்கள். ஆனால் கடந்த 25 ஆண்டுகளில் காலம் முற்றாக மாறி சங்க வளர்ச்சிக்கு இளைஞர்களின் செயற்பாடே உறுதுணையாக நின்றது, நிற்கின்றது நிற்கும் என நான் மகிழ்ச்சியுடன் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

பொன்விழா மண்டபம் பூர்த்தியாவதற்கு அவர்களே போதிய பங்கெடுத்தனர் அவர்களது புத்தி சாதுரியத்தினாலும் விடாமுயற்சியினாலும் பலரை கவர்ந்து அவர்களது உதவியுடன் தமது நடவடிக்கைகளை திறம்பட செய்து வந்தனர். அவர்களது செயல்களுக்கு ஒரு சாட்சியாக நிற்பது சங்க வளவில் மேற்கே அமைந்துள்ள குழாய் கிணறும் நீர் வசதியுமாகும். அவர்கள் தமது உற்சாகத்தில் பவள விழா மண்டபம் ஒன்றும், விளையாட்டு அரங்கு ஒன்றும் அமைக்க வேண்டும் என்றும் திட்டமிட்டுள்ளார்கள்.

எமது சங்க நடவடிக்கைகளில் பொருளாதார ரீதியில் பல உதவிகளை செய்பவர்கள் எமது ஊர் பொதுமக்களும், எமது சந்தியில் உள்ள வர்த்தகர்களும் மற்றும் வியாபாரிகளுமாகும். எமது இளைஞர்கள் எந்த நடவடிக்கைகளை எடுத்தாலும் இவர்கள் எவ்வித மறுப்புமின்றி இன்முகத்துடன் உதவிகள் செய்வதை நாம் இந்நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது சங்கம் இவர்களுக்கு என்றும் நன்றி உடையதாய் இருக்கும்

இப்படியான பரோபகாரிகளின் உதவியினாலேயே நாம் எமது சமய கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவதுடன் நூல் நிலையம், வாசகசாலை, நல்லூர் தண்ணீர்ப் பந்தல் ஆகியவற்றை சிறப்பாக நடத்த முடிகின்றது. அத்துடன் சங்கத்தால் ''கரிய புல வைரவர்'' கோவிலின் வருடாந்த உற்சவத்தில் ஒரு நாள் திருவிழாவும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

எமது இளைஞர்களில் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள போதும் மற்றவர்கள் எவ்வித சலிப்புமின்றி தொடர்ந்தும் உற்சாகத்துடன் செயல்படுவது மகிழ்ச்சிக்குரியது ஒன்றாகும்.

ஆகவே இவ்வளவு காலமும் எமக்கு பல விதங்களில் உதவிகளை செய்து உற்சாகமூட்டிய உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு திருநெல்வேலி மக்களுக்கும் எமது வர்த்தகர்களுக்கும், நண்பர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம், பவளவிழா சிறப்பிக்க வந்த பெரியவர்களுக்கும், மலர் மூலம் எமக்கு ஆசியுரை தந்தவர்களுக்கும், மலர் சிறப்புற அமைய விளம்பரம் தந்து உற்சாகப்படுத்திய வர்த்தகர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் உங்கள் ஆசிகள் எங்களுக்குக் கிடைப்பதாக!

வணக்கம்

நல்லை ஆதீனம்
நல்லூர்.
7–1–87

இரத்தினசபாபதி சுவாமிநாதன்
பொதுச் செயலாளர்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ் ★

எழில் மிகும் திருநெல்வேலி நகர் இந்து இளைஞர் சங்கம்
சிருற்றுச் சிறப்புடன் எழுபத்தைந்தாண்டுகள்
எழுச்சியைக் கொண்டாடும் இவ்வமயம் எமது இதயபூர்வமான மகிழ்ச்சியையும்
மேலும் நூற்ருண்டுக்கான நல்லசிகளையும் சமர்பணம் செய்கின்ருேம்

மக்கள் சேவையில் சகலவிதமான உணவுப் பொருட்களிற்கும்
பண்ணைவளர்ப்புக்கான தீனிவகைகளிற்கும்
சில்லறை மொத்த வியாபார வினியோகத்தர்கள்

இணைந்த சேவைகளில் நாம்

ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்
பலாலி ருேட்
திருநெல்வேலிச் சந்தி

நியூ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்
ஆடியபாத வீதி
திருநெல்வேலிச் சந்தி

திருநெல்வேலி.
தினமும் மலிவுவிற்பனையாளர்கள்

நிதான விலை!

சிறந்த ரகம்!!

அதி சிறந்தரக கைத்தறிப் பிடவை உற்பத்தியாளரும்
மொத்த - சில்லறை விற்பனையாளரும்

சிந்தெட்டிக் பிடவை வகைகள்
மணிப்புரி, நைலக்ஸ், வூலி சேலை வகைளும்
பட்டுவேட்டி, சேட்டிங் - சூட்டிங்
மற்றும் பிடவைத் தினுசுகளையும் தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14, பெரியகடை : : யாழ்ப்பாணம்.

☎ 24214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழாவை சிறப்பாக அமைய வாழ்த்தி
மேலும் பல நூற்றுண்டு விழாக்களை சிறப்புற நடாத்த
எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

டாக்டர் (திருமதி) S. இராஜேஸ்வரன்

தி மெடிக்கல் கிளினிக்

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற நடைபெற வாழ்த்தி
மென்மேலும் இந்துவாலிபர் சங்கம் தனது பணிகளை
மக்களுக்கு நல்க அபிராமியின்
நல்லாசிகள் உரித்தாகுக.

வாடிக்கையாளர்களே! பாவனையாளர்களே!
உங்களுக்குத் தேவையான

- ★ மின்சார உபகரணங்கள்
- ★ எஸ்-லோன் பைப் வகைகள்
- ★ பெயின்ற் வகைகள்
- ★ விவசாயக் கிருமி நாசினிகள்
- ★ விவசாய விதைகள்

அத்தனையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

# அபிராமி

பலாலி வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சேவையை
ஒரே நோக்கமாகக் கருதி இயங்கிவரும்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின்
75வது வருட பவள விழா சிறப்புற அமையவும்
மென்மேலும் தனது சேவையை மக்களுக்கு வழங்க
எமது நல்லாசிகள்



# அல்ரூ கொம்யூனிக்கேசன்ஸ்

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

லக்ஷ்மி, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் ரெலி. 23336

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org